# ஞானக்கதிர்

உதயன் வழங்கும்
இந்து மத இதழ்

மாசி - சித்திரை

விலை - 50/=






உங்கள் இதயம் கவர்ந்த தங்க நகையின் தரத்தின் சின்னம் உதயா

தங்கமான வருடமாக இந்த வருடத்தை ஆரம்பிக்க உதயா
ஜீவலர்ஸ்க்கு விஜயம் செய்யுங்கள்.

உதயா ஜீவல்லர்ஸ்

தொ.பே: 021 222 4434

இல. 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## கதிரின் ஒளி....

மண்கும்பான் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோபுர கும்பாபிஷேக படங்கள் 1
கோவில் கும்பாபிஷேக சடங்குகளும், விளக்கங்களும் 3
இயற்கை இரகசியங்களை எவ்வாறு சித்தர்கள் கண்டார்கள் 5
ஸ்ரீ ராமருடன் ஹனுமான் போர் 6
பிரம்ம ஞானம் 8
வல்லமை நிறைந்த மாசி மகம் 10
கருங்கல்லில் தெய்வச் சிலைகள் வடிப்பது ஏன் 12
திருநீற்றின்மகிமை 13
தேவி ஸ்தோத்திர மாலை 14
அனைத்துச் செல்வங்களுக்கும் கூர்ம அவதாரம் 15
வீட்டில் விளக்கு ஏற்றுவதால் உண்டாகும் நன்மைகள் 17
ஸ்ரீ பைரவர் வழிபாடும் மந்திரங்களும்... 19
கொடிமரத் தத்துவம் 20
சூரியனில் இருந்து வெளிவரும் ஓம் எனும் பிரணவ மந்திரம் 22
தீமைகளில் இருந்து காக்கும் ருத்திராட்சம் 23

### ஞானச் செல்வங்களே வணக்கம்

அறுபது ஆண்டுகள் ஒரு காலச் சக்கரத்தில் சுழன்று கொண்டேயிருக்கிறது. மன்மத வருடத்தை வழியனுப்பிவிட்டு துர்முகி வருடத்தை வரவேற்போம். இந்தப் புத்தாண்டு எமக்கு சிறப்பானதாக அமைய வேண்டுமென மனித மனங்கள் ஏக்கத்துடன் எதிர்கொள்கின்றன. ஏக்கம் மட்டும் போதுமா? முயற்சி வேண்டாமா?

உழைத்து உழைத்துச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் வாழ்வில் முன்னேற முடியுமா? சாப்பிடுவதற்காகத் தான் வாழ்கின்றோம் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். வாழ்வதற்காகவே சாப்பிடுகின்றோம். வாழ்வில் உயர உழைப்பைத் தேடுங்கள் முயற்சி முன்னேற்றத்தைக் காட்டும். இந்த வருடம் உங்களுக்கு வழி காட்டட்டும். முயற்சி செய்யுங்கள்.

- ஆசிரியர்-

ஞானச் செல்வங்களே!

தங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள், படைப்புகள், புகைப்படங்கள், ஓவியங்கள் அனைத்தையும் அனுப்ப வேண்டிய முகவரி:

**ஞானக்கதிர்**
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சந்தா விபரம்

**ஒரு வருடத்துக்கான சந்தா தபால் செலவுடன் 600 ரூபாய்கள் மட்டும்.**

தங்களின் பெயர் முகவரியுடன் காசுக்கட்டளை பின்வருமாறு எடுக்கப்படல் வேண்டும்.
நியூ உதயன் பப்பிளிக்கேசன் பிறைவேற் லிமிட்டெட்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வெளியீடு :**
உதயன் பத்திரிகை
நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட்
361 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**ஆசிரியர் குழு :**
திரு.ம.வ.கானமயில்நாதன் - பிரதம ஆசிரியர் உதயன் பத்திரிகை
கலாபூஷணம் கு.சரவணபவானந்தன் B.A,PGD,SLPSI, SLEAS
யசோதை சரவணபவன் - பணிப்பாளர், உதயன் குழுமம்
செ.மகேசு - ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்,வ.கி.மா
செ.செல்வராசா - B.A,PGD,SLPSI,
கே.ஏ.ஜெயக்குமார் - Sp.Trd. SLPS 2.1

**ஆலோசனை :**
பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்
சிவ.மகாலிங்கம் - B.A,PGD (ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்- இந்து சமயத் திணைக்களம்)
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
சோதிட மணி சைவமணி
செல்வ.சண்முகரட்ணம்

**தொகுப்பு, வடிவமைப்பு :** த.தினேஸ், ந.வதனா

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அதிசுந்தர சப்ததள சப்தகலச மகா கும்பாபிஷேகம் 23.03.2016










கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்







கோபுரம் மட்டும் உயரவில்லை இத்திருப்பணிகளில் ஈடுபட்டவர்களின் உள்ளமும் உயர்ந்தது. ஒன்று நூறல்ல உதவிட எண்ணிவிட்டால் அந்த எண்ணமே உயர்ந்தது.






### ஆவாஹனம்

ஆவாஹனம் என்றால் கும்பத்தில் உள்ள நீருக்குள் மூர்த்திகளை எழுந்தருள செய்தல் என்பது பொருள். கும்பத்தை முதலில் கோயிலில் உள்ள தெய்வத்திருவின் அருகில் வைத்து தர்ப்பை, மாவிலை ஆகியவற்றைக் கொண்டு மந்திரங்கள் ஓதி, பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியை கும்பத்தில் எழுந்தருளச் செய்வார்கள். பிறகு அந்த கும்பத்தை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள். தர்ப்பையின் மூலம் கும்பத்தில் உள்ள தெய்வீக சக்தியை பிம்பத்திற்கு மீண்டும் செலுத்துவார்கள்.

### கும்பம்

யாகசாலையில் மந்திரம், கிரியை, தியானம் ஆகியவற்றுடன் வளர்க்கப்பட்டு எழும் புகையுடன் வேத ஒலி, சிவாகம ஒலி, மறை ஒலி ஆகியவற்றுடன் பக்தர்களின் நல்ல எண்ணங்களும், எங்கும் நிறைந்திருக்கின்ற திருவருள் சக்தியை தூண்டிவிட்டு கும்பத்தில் விளங்கச் செய்யும். அப்போது கும்பம் தெய்வீக சக்தி பெறும். இந்த கும்பத்தை சிவனின் வடிவமாக ஆகமங்கள் கூறுகின்றன.

### பாலாலயம்

கும்பத்தை கோயிலில் உள்ள தெய்வச்சிலை அருகில் வைப்பார்கள். தர்ப்பை, மாவிலை கொண்டு மந்திரங்கள் ஓதி, தெய்வ வடிவில் விளங்கும் மூர்த்தியை கும்பத்திற்கு மாற்றுவார்கள். பின்பு அதை வேறிடத்திற்கு எழுந்தருளச் செய்வார்கள். இதை பாலாலய பிரவேசம் என்பர்.

### கிரியைகள்

கும்பாபிஷேகம் நடக்கும்போது ஒரு காலத்தில் 64 கிரியைகள் செய்யப்பட்டன. காலப்போக்கில் 55 கிரியைகள் செய்யப்பட்டன. ஆனால் தற்போது எல்லா கிரியைகளும் செய்யப்படுவதில்லை. 64ல் முக்கியமான 13 கிரியைகளை மட்டும் தேர்ந்தெடுத்து கும்பாபிஷேகத்தை நடத்துகின்றனர்.

### ஆசாரியவர்ணம்

கும்பாபிஷேகத்திற்கென கிடைக்கும் பொருளுக்கு பூஜை செய்ய வேண்டும். இதை தன பூஜை என்பர். பூஜை செய்த பணம் அல்லது பொருளில் ஒரு பகுதியை கட்டட வேலைக்கும், ஒரு பகுதியை நித்திய, மாதாந்திர, விசேஷ நட்சத்திர பூஜை உற்சவத்திற்கும், மூன்றாவது பாகத்தை ஆபரணங்கள் வாங்கவும் ஒதுக்குவார்கள். இப்படியே கோயில் காரியங்கள் சம்பந்தப்பட்ட 11 பாகமாக இந்த செல்வத்தை பிரிப்பார்கள். கும்பாபிஷேகத்தை நடத்தும் பிரதான ஆசாரியரை வணங்கி, இந்த செல்வத்தைக் கொண்டு குடமுழுக்கு நடத்தி தாருங்கள் என கேட்டுக்கொள்ள வேண்டும். இதையே ஆசாரியவர்ணம் என்பர்.

### அனுக்ஞை

கோயில் பழுது பார்க்கப்பட்டு திருப்பணிகள் நிறைவு பெற்ற பிறகு, ஒரு நல்ல நாளில் கும்பாபிஷேக நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி வைப்பதற்கு தகுதியான ஒருவரை தேர்ந்தெடுப்பதையே அனுக்ஞை என்கிறார்கள். விநாயகர் சன்னதி முன்பு இந்த நிகழ்ச்சி நடக்கும். சம்பந்தப்பட்டவரே கும்பாபிஷேகத்தை நடத்தித் தர அனுமதி தரவேண்டும் என விநாயகரிடம் வேண்டி கேட்டுக்கொள்வதே அனுக்ஞை ஆகும்.

### பிரவேசபலி

கும்பாபிஷேகம் செய்யும் இடத்திலிருந்து எட்டு திசைகளிலும் வசிக்கின்ற ராட்சதர் முதலான தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை கடல், மலை, காடு, ஆறு, மயானம் ஆகிய இடங்களில் சென்று இருங்கள் என திருப்திப்படுத்தி வழி அனுப்புவதே பிரவேச பலி ஆகும். கும்பாபிஷேகங்களில் மட்டுமின்றி, கோயில்களில் திருவிழா நடக்கும்போதுகூட இதை செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

### வாஸ்துசாந்தி

ஆகமங்களிலும், சிவமகா புராணத்திலும் வாஸ்து பற்றி கூறப்பட்டுள்ளது. அந்தகாசுரன் என்பவனை கொல்வதற்காக தேவர்கள் சிவபெருமானிடம்

கோரிக்கை வைத்தனர். சிவபெருமான் தனது வியர்வைத் துளியிலிருந்து ஒரு பூதத்தை உருவாக்கி அந்தகாசுரனை வதைத்தார். அந்த பூதம் சிவனிடம் பல வரங்கள் பெற்று உலகத்தை வருத்தியது. சிவபெருமான் பூதத்தை அடக்க அதிபவன் என்பவரை சிருஷ்டித்து அனுப்பினார். அதிபவன் அந்த பூதத்தின் உடலின்மீது 53 தேவதைகளை வசிக்க செய்து, மாயக்கயிறுகளால் கட்டினார். இதனால் இவர் வாஸ்துபுருஷன் என பெயர் பெற்றார். வாஸ்து புருஷனால் குடமுழுக்கு கிரியைக்கு இடையூறு நேராதபடி 53 தேவதைகளுக்கும் பூஜை, பலி, ஹோமம் ஆகியவற்றால் சாந்தி செய்ய வேண்டும். இதுவே வாஸ்துசாந்தி ஆகும்.

### ரக்ஷா பந்தன்

காப்பு கட்டுதல் என இதற்கு பொருள். சிவாச்சாரியார்கள் நாகராஜனுக்கு பூஜை செய்து, மந்திரித்த மஞ்சள்கயிறை வலது மணிக்கட்டில் கட்டிக்கொள்வார்கள். கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் சிவாச்சாரியார் களின் குடும்பத்தில் எதிர்பாராத வகையில் ஏதாவது தீட்டு ஏற்பட்டால் காப்பு அவிழ்க்கப்படும்வரை அந்த தீட்டு அவர்களை பாதிக்காது.

### கடஸ்தாபனம்

கும்பாபிஷேகத்தில் மிக முக்கியமானது கடஸ்தாபனம். கலசம் நிறுவுதல் என்பது இதன் பொருள். தங்கம், வெள்ளி, தாமிரம், மண் ஆகிய ஏதாவது ஒன்றில் கும்பங்கள் செய்யப்படும். கும்பங்களை இப்படித்தான் அமைக்க வேண்டும் என்ற வரையறைகள் உள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட கும்பங்களை குறைகள் இல்லாமல் மந்திரித்து, அக்னியில் காட்டுவார்கள். சிவப்பு மண்ணை கும்பத்தின் மீது பூசி, நூல் சுற்றி ஆற்றுநீர் அல்லது ஊற்று நீரால் நிரப்புவார்கள். கும்பத்தின் மேல் வாய் பகுதியில் மாவிலைகளை செருகி, தேங்காய் வைப்பார்கள். கும்பத்திற்குள் நவரத்தினம், தங்கம், வெள்ளி, நவதானியம் ஆகியவற்றை பரப்புவார்கள். எந்த மூர்த்திக்கு குடமுழுக்கு நடக்கிறதோ அந்த மூர்த்தியின் உடலாக அந்த கும்பம் கருதப்படும்.

### அஷ்டபந்தனம்


கும்பாபிஷேகத்தை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் என சொல் வதுண்டு. பீடத்தின்மீது வைக்கப் படும் தெய்வ திருவுருவங்கள் அசையாமல் உறுதியுடன் நிலைத்து நிற்க, கொம்பரக்கு, சுக்கான்தான், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, ஜாதிலிங்கம், தேன்மெழுகு, எருமையின் வெண்ணெய் ஆகிய எட்டுவகை மருந்துகளை கலந்து சார்த்துவார்கள். அஷ்டம் என்றால் எட்டு என பொருள். இந்த எட்டுவகை மருந்துகளை சார்த்துவதற்கே அஷ்ட பந்தனம் என பெயர்.



### மிருத்சம்கிரஹணம்

இதற்கு மண் எடுத்தல் என பொருள். கும்பாபிஷேகத்தின்போது அங்குரார்ப்பணம் எனப்படும் முளையிடுதல் நிகழ்ச்சி நடக்கும். மண்ணைத்தோண்டி பாலிகைகளில் இட்டு, நவதானியங்களை தெளித்து, முளைப்பாலிகை அமைப்பார்கள். இதுவே மிருத்சம் கிரகஹணம் எனப்படும்

# இயற்கை இரகசியங்களை எவ்வாறு சித்தர்கள் கண்டார்கள்



இன்றுவரை கண்ட விஞ்ஞானம் அனைத்தும் மனித உடலுக்குள் நடைபெறும் அதிசயங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. சுத்தவெளியிலி ருந்து பரமாணுக்கள் தோன்றின.

பரமாணுக்கள் சேர்க்கையால் பஞ்சபூதங்கள் ஏற்பட்டன. நிலம், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு பூதங்களுடன் விண் என்ற ஐந்தாவது பூதமான உயிர்ச்சக்தி சுழலும்பொழுது, அதன் தடை உணர்தலாக உணர்ச்சிநிலை பெற்று, ஓரறிவு முதற்கொண்டு தொடங்கிய பரிணாமத்தின் உச்சமாக வந்த ஆறறிவு பெற்றவன் தான் மனிதன்.

இந்த மனித உடலிலே, உயிர், ஜீவகாந்தம், மனம் என்ற நான்கும் சேர்ந்து இயங்கும் போது ஏற்படக்கூடிய ரசாயன இயக்கம், மின்சார இயக்கம், காந்த இயக்கம் இவற்றை கடந்து இப்பிரபஞ்சம் முழுவதும் நடைபெறக்கூடிய இயக்கங்கள் வேறெதுவும் இல்லை.

இந்த உடலில் நடைபெறாத இரகசியத்தை இதுவரை எந்த விஞ்ஞானமும் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிக்கவும் இயலாது.

அத்தகைய முறையில் பரிணாமத்தின் உச்சமாக உள்ள மனித உடலின் அற்புதமான அமைப்பையும், இயக்கத்தையும் அகத்தவச்சாதனையால் அறிந்தவர்கள் சித்தர்கள். இந்த உடலிலுள்ள அணுக்கள், பேரணுக்கள், செல்கள் இவைகள் எவ்வாறு அடுக்கப்பட்டும், சேர்த்துப்பிடித்துக்கொள்ளப்பட்டும் இருக்கின்றன என்பதையெல்லாம் அறிந்தவர்கள் சித்தர்கள்.

அப்படி செல்களாலான கட்டிடமாகிய உடலின் கட்டுமானத்திற்கும், கட்டுக்கோப்புக்கும், உறுதிக்கும், நீடிப்புக்கும் வேண்டிய காந்த சக்தியை எவ்வாறு பெற்று, எவ்வாறு அதை மின் சக்தியாக மாற்றி, ஆங்காங்கே பல ரசாயனங்களை தோற்றுவித்து இயக்கநியதியோடு உடல் என்ற அற்புதமான நிலையம் இயங்குகின்றது என்பதையெல்லாம் அறிந்தவர்கள் சித்தர்கள்.

மனித உடலின் இயக்கங்களையெல்லாம் உணர்ந்துகொள்வதோடு, பிற உயிரில் ஏற்படும் இன்ப துன்பங்களையும், பிற பொருட்களின் இயக்கங்களையும் கூட அறிவு எவ்வாறு உள்நுழைந்து அறிந்து வருகிறது என்றும் சிந்தித்துப்பார்த்தார்கள்.

ஒவ்வொரு பொருளிலிருந்தும் வருகின்ற அலைகள் மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல், இரண்டினிடையே முன் பின்னாக ஓடுதல் என்ற ஐந்து தன்மைகளைப் பெறுகின்றன. என்பதை சித்தர்கள் உணர்ந்தார்கள்.

இந்த அலைகள் பஞ்ச பூதங்களாலான பருப்பொருட்களில் மோதும்போது அழுத்தம், ஒலி. ஒளி, சுவை, மணம் அத்துடன் மனித உடலிலே புலன் கடந்த நிலையில் மனமாகவும் மாற்சி பெறுகின்றன என்பதையும் தங்கள் தவ வலிமையால் உணர்ந்துகொண்டார்கள்.

அந்த விரிந்த மனநிலையிலே பிரபஞ்ச உற்பத்தி இரகசியங்கள் எல்லாம் அவர்கள் உள்ளத்திலே நிறைந்திருக்கும்.

எல்லா வினாக்களுக்குமான விடைகளும் அவர்களுக்குள்ளாகவே இருக்கின்றன. எனவே அங்கிருந்தே தங்கள் உள் நோக்கால் எடுத்துக்கொண்டார்கள். சித்தர்களுக்கு தனியாக ஆராய்ச்சி சாலை எதுவும் தேவையில்லை.

ஆராய்ச்சி சாலை என்று வைத்தால் ஏதாவது ஒரு பொருளைப் பற்றித்தான் ஆராய இடமிருக்கிறது. இந்த உடலையே எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா ரகசியங்களையும் பற்றி ஆராய முடியும்.

அந்த முறையில் உடல் விஞ்ஞானத்தை அறிந்தவர்கள் சித்தர்கள். நீங்களும் முயன்றால் ஒரு சித்தராக சிறப்புறலாம். அத்தகைய ஆற்றல் மனிதனாகப் பிறந்த எல்லோரிடத்திலுமே அடங்கியுள்ளது.

வாழ்க வளமுடன்

**- வேதாத்திரி மகரிஷி**

இராவண வதமெல்லாம் முடிந்து இராமர் அயோத்தி திரும்பிவிட்டார். பட்டாபிஷேகமும் விமரிசையாக நடைபெற்றது. மக்கள் குறையின்றி வாழவும், பருவமழை தவறாது பெய் யவும் அப்போதெல்லாம் அரசர்கள் அடிக்கடி யாகம் செய்வர். இராம பிரா னும் வசிஷ்டர், ஜனகர், விஸ்வா மித்திரர் போன்ற மகரிஷிகளை கொண் டு யாகம் ஒன்றை செய்ய முடிவு செய்து அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஆணையிட்டார். யாகமும் அயோத்தி நகருக்கு வெளியே ஒரு பரந்து விரிந்த இடம் தேர்வு செய்யப்பட்டு விமரிசையாக துவங்கியது.

அப்போது அது வழியே இராமனின் ஆளுகைக்கு உட்பட்ட தேசம் ஒன்றை ஆண்டு வந்த சகுந்தன் என்கிற அரசன் வந்தான். யாகம் ஒன்று மிகப் பெரிய ரிஷிகளை கொண்டு நடத்தப்பட்டு வருவதை பார்த்து, வியந்தவன் உள்ளே சென்று அவர்களிடம் ஆசி பெற தீர்மானித்தான். ஆனால், வேட் டையாடிவிட்டு திரும்பிக்கொண்டிருந்தமையால், அப்படியே யாகசாலை க்குள் செல்ல விருப்பமின்றி, வெளியே நின்றபடி உள்ள இருந்த ரிஷிக ளை பார்த்து வசிஷ்டாதி ரிஷிகளுக்கு என் வணக்கங்கள்! என்றான். இதை நாரதர் கவனித்துவிட்டார்.

இன்றைய கலகத்திற்கு கரு கிடைக்கவில்லையே என ஏங்கிக் கொண்டி ருந்தவருக்கு இது லட்டுபோல கிடைத்துவிட்டது. நேரே விஸ்வாமித்திர ரிடம் சென்று, விஸ்வாமித்ர.மகாமுனிவரே! இராமனின் ஆளுகைக்குட் பட்ட ஒரு நாட்டின் சிற்றரசன் சகுந்தன். அவன் இந்த யாகசாலை முன்பு நின்று, வசிஷ்டாதி முனிவர் யாவருக்கும் என் வணக்கங்கள்' என்று கூறி விட்டுப் போகிறான். வசிஷ்டரைப் போன்று தாங்களும் இராமருக்குக் குருதானே? தாங்களும்தானே முக்கிய பொறுப்பேற்று இந்த யாகத்தை நடத்துகிறீர்கள்? தங்கள் பெயரையும் சொல்லிச் சகுந்தன் வணக்கத்தைத் தெரிவித்திருக்க வேண்டாமா? வேண்டுமென்றே விஷமத்தனமாகத் தங்களை இந்தச் சிற்றரசன் அவமானப் படுத்தியிருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது என்று சிண்டு முடிந்தார்.




அது கேட்ட விஸ்வாமித்திரர் கொந்தளித்தார். என்ன ஆணவம் அவனுக்கு அவனை இப்போதே என்று பல்லைக் கடித்தபடி சபிக்க எத்தனிக்க, நாரதர் குறுக் கிட்டு, விஸ்வாமித்திரரே சற்றுபொறும். சகுந்தனை சபித்து விட்டு தங்கள் தவவலிமையை ஏன் குறைத்துக்கொள்ள வேண்டும்? பேசாமல் இராமனை அழைத் து சகுந்தனை தண்டிக்கும் பொறுப்பை அவரிடம் விட்டுவிடவேண்டியது தானே? என்றார்.

நீங்கள் சொல்வதும் சரி தான் என்று நாரதரின் கருத்தை ஆமோதித்த விஸ்வாமித்திரர் இராமனை தன்னை வந்து சந்திக்கும்படி பணித்தார். இராமனும் விஸ்வாமித்திரரை வந்து சந்தித்தார். நடந்தவற்றை அவரிடம் விளக்கிய விஸ்வாமித்திரர், உன் குருவை அவமதித்தவனுக்கு என்ன தண்டனை தரப் போகிறாய்? என்று கேட்டார். ஏதோ ஒரு மிகப் பெரிய உண்மையை உலகிற்கு உணர்த்த வேண்டியே நாரதர் இந்த நாடகத்தை அரங்கேற்றுகிறார் என்று ஸ்ரீராமனுக்கு தெரியாதா என்ன?

நீங்களே சொல்லுங்கள் குருவே. நீங்கள் என்ன சொன்னாலும் அதை நிறைவேற்ற தயாராக இருக்கிறேன் என்றார். இன்று மாலை சூரியன் மறைவதற்குள் சகுந்தனின் தலை என் காலடியில் கிடக்கவேண்டும்! என்கிறார். உத்தரவு குருவே! என்று கூறியபடி சகுந்தனை தேடி புறப்பட்டார் இராமர். நாரதர் அடுத்து உடனே சகுந்தனிடம் ஓடி ச்சென்று, என்ன காரியமப்பா செய்துவிட்டாய் நீ. விஸ்வாமித்திரருக்கும் சேர்த்து வணக்கம் கூறியிருக்கலாமே இதோ உன் தலையை துண்டிக்க இராமனைப் பணித்திருக்கிறார். இராமன் உன்மீது போர் தொடுக்க கிளம்பி வந்துகொண்டிருக்கிறார்

ஐயோ இராமபிரானை எதிர்க்க என்னால் முடியுமா? பேசாமல் என் தலையை நீங்களே துண்டித்து இராமன் கைகளில் சேர்பித்திவிடுங்கள் என்று உடைவாளை நாரதர் கைகளில் கொடுத்தான். நாரதர் அவனது நிலை கண்டு கலங்கினார். சற்று பொறப்பா. உன்மீது எந்த தவறும் இல் லை எனும்போது நீ ஏன் வீணாக உயிர்த்தியாகம் செய்ய வேண்டும்? மேலு ம் நீ மாண்டுவிட்டால் உன் மனைவி, மக்களுக்கு, குடிகளுக்கு யார் இருக் கிறார்கள்.

அப்படியானால் இதிலிருந்து தப்பிக்க நீங்கள் தான் ஒரு உபாயம் சொல் லவேண்டும் பிரபு என்று நாரதரிடம் கோரிக்கை விடுத்தான். நாரதர் யோசித்தாவாறு, உன் நாட்டின் எல்லையில் இருக்கும் கானகத்தில் உள்ள மலைப் பகுதியில் தான் அனுமனின் தாய்

அஞ்சனா தேவி வசிக்கிறாள். அவளை சென்று அவரிடம் சரணடை. அவள் ஒருவளால் தான் உன்னை காப் பாற்ற முடியும்! என்றார்.

சகுந்தனும், உடனே அஞ்சனா தேவி வசிக்கும் கானகத்திற்கு சென்று அவளை தேடுகிறான். நேரம் கடந்து சென்று கொண்டி ருந்தே தவிர, அஞ்சனா தேவியை கண்டுபிடிக்க முடியவில்லை. கடை சியில், தீ மூட்டி அஞ்சனா தேவி சர ணம்! என்று கூறியபடி அதில் குதித்து உயிர்த் தியாக செய்ய முயன்றான்.

அஞ்சனாதேவி அவன் முன் பிரத்யட்சமானாள். குழந்தாய் எதற் காக என்னை தேடிக்கொண்டிருந் தாய்? தற்போது உயிரையும் அதற் காக தியா கம் செய்ய துணிந்தாய்? தாயே எனக்கு உயிர்பிச்சை கொடுங்கள். அது உங்களால்தான் முடியும் என்னவிபரம் என்று சொல்லப்பா இல்லை தாயே எனக்கு அடைக்கலம் கொடுப்பதாக முதலில் சொல்லுங்கள் பிறகு சொல்கிறேன் சகுந்தன் பிடிவாதமாக நிற்கவே, அஞ்சனா தேவி, உனக்கு அபயமளித்தேன். கவலைவேண் டாம்! என்று வரமளித்தாள். இறுதி யில் நடந்தது அனைத்தையும் விவ ரித்தான் சகுந்தன். இராமபிரான் சகுந்தனை தேடிக்கொண்டிருக்கும் விபரம் அறிந்தது, அஞ்சனா தேவி திடுக்கிட்டாள்.

இருப்பினும் கொடுத்த வாக்கின் படி சகுந்தனை காப்பது தன் கடமை என்பதால், அனுமனை தன் முன் வரும்படி நினைத்தாள். தாய் நினைத்த அடுத்த நொடி, அனுமன் அங்கே தோன்றினான். தாயே என்னை அழைத்த காரணம் என் னவோ? தாங்கள் கட்டளைக்கு காத் திருக்கிறேன் என்றார். அஞ்சனாதேவி அனைத்தையும் விவரித்து, என்னி டம் சரண் புகுந்தவனை காப்பாற்ற வேண்டியது உன்கடமை! என்று கூறி சகுந்தனை இராமனின் அஸ் திரத்திடமிருந்து காக்கும் பொறுப்பை அனுமனிடம் ஒப்படைத் தாள்.

இக்கட்டானதொரு தனக்கு ஏற்பட்டதை எண்ணி வருந்தினான் அனுமன். இருப்பினும் தாய் சொல் லை காப்பாற்ற வேண்டியது தனய னின் கடமை யல்லவா? எனவே தனது தாய்க்காக, உயிரினும் மேலான தனது இராம னையே எதிர்க்க துணிந்தான். தனது வாலால் ஒரு பெரிய கோட்டைபோ ல எழுப்பி, அதனுள் சகுந்தனை ஒளிந்துகொள்ளுமாறு செய்து, அதன் மேல் தான் உட்கார்ந்துகொண்டார். சகுந்தனை தேடி அந்தப் பகுதிக்கு வந் த இராமன், அவனை கண்டு பிடிக்க இயலாமல், அஸ்திரங்களை ஜெபித்து சகுந்தனின் சிரத்தை கொய்து வாருங்கள் என்று கட்டளையிட்டார்.



ஆனால், அவர் செலுத்திய அஸ்திரங்கள் அனைத்தும் மீண்டும் அவர் காலடியிலேயே வந்து வீழ்ந்தன. சக்தி மிக்க இராம பாணம் கூட தோற்று விட்டது. இராமருக்கு ஒன்றுமே புரியவில்லை. இராம பாணம் தோற்றதாக சரித்திரமே யில்லையே என்ன காரணம் என்று புரியா மல் குழம்பித் தவித்தார். அது சமயம் அங்கே வந்த நாரதர், இராமா, உன் அஸ்திர பிரயோ கத்தை ஒரு கணம் நிறுத்தி, சற்று எதிர்பக்கம் உற்றுக் கவனி. காரணத்தை நீயே அறிவாய் என்றார். இராமனும், அப்படியே செய்ய, எதிர்புறம் இருந்து ஜெய் ஸ்ரீ ராம் ஜெய் ஸ்ரீ ராம் என்று இராம நாமம் ஒலிப்பது காதில் கேட்டது. இது அனுமனின் குரலாயிற்றே அவன் ஒருவனால் தான் இத்தனை பக்தியுடனும் தீர்க்கத்துடனும் இராம நாமத்தை கூற முடியும் என்று தீர்மானித்தார்.

இராமா நீ நினைப்பது சரிதான். அனுமன் அங்கே இராம நாமம் ஜபித்து கொண்டிருக்கிறான். உன்னைவிட உன் நாமத்திற்கு சக்தி அதிகம். உன் நாமத்தை அனுமன் இதயப்பூர்வமாக ஜெபித்துக்கொண் டிருக்கும்போது, அவனைமீறி அவன் காவல் காத்துக்கொண்டிருக் கும் சகுந்தனை உன்னா ல் ஒன்றும் செய்ய முடியாது! இராமபாணம் மட்டுமல்ல பிரம்மாஸ்திரம் கூட இதன் முன் பலிக்காது! என்றார். இதற்க்கிடையே சினம் தணிந்த விஸ்வாமித்திரர், தன்னால் ஒரு நிரபராதியின் உயிர் போய்விடக் கூடாதே என்று அங்கு ஓடி வந்தார்.

இராமா நிறுத்து நிறுத்து சகுந்தனை ஒன்றும் செய்துவிடாதே குரு நாதா மன்னிக்கவேண்டும். இராமன் வாக்கு தவறினான் என்று நாளை சரித்திரம் பேசக்கூடாதே சகுந்தனின் தலையை சூரிய அஸ்தமனத்திற்குள் தங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன் என்று நான் அளித்த வாக்குறுதி என்னவாவது? - இது இராமன்.

தான் போட்ட முடிச்சை தானே அவிழ்க்க விரும்பிய நார தர், சகுந்தனை வெளியே வரும்படி அழைத்து, விஸ்வா மித்திரரின் பாதங்களில் அவன் தலைபடும்படி வீழ்ந்து நமஸ்கரிக்கச் சொன்னார்! ஆக நாரத மகரிஷியின் சாதுரியத் தால் அனைவரின் வாக்கும் காப்பாற் றப்பட்டது. இராம நாமத்தின் பெருமை யும் உலகிற்கு உணர்த்தப் பட்டது.

**நாடிய பொருள் கைகூடும்**
**ஞானமும் புகழும் உண்டாம்**
**வீடியல் வழியதாகும்**
**வேரியங்கமலை நோக்கும்**
**நீடிய அரக்கர் சேனை**
**நீறுபட்டழிய வாகை**
**சூடிய சிலையிராமன் தோள்வலி**
**கூறுவார்க்கே!**

- ராம்சுரத்குமார்

ஒருவர் பிறவியில் பிராமணராகப் பிறந்திருந்தாலும், பிரம்மஞானம் பெற அவர் முயற்சி செய்யாதவ ராகவே இருந்தால், அவரைப் பிரமணன் என்று சாஸ்திரங்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

மாறாக ஒருவர் பிறவியில் வேறு குலத்தவராக இருந்தாலும், தவத்தால் தாம் பிரம்மரிஷி என்று பெயர் வாங்க வேண்டும் என நினைத்தார். எனவே அவர் காடு சென்று கடுந்தவம் புரிந்தார். கடுந்தவத்திற்குப் பின் ஒருநாள் அவருக்குத் தாம் பிரம்மஞானம் எய்தியிருப்பது போன்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே அவர் வசிஷ்டரிடம் சென்று அவரை வணங்க பெற்றிருந்தால் பிரம்மரிஷி அவரைப் பதிலுக்கு வணங்கலாம். அப்படி இல்லாமல் வணங்கியவர் பிரம்மஞானம் பெறாதவராக இருந்தால் அவரை, பிரம்மரிசி தமது கைகளை உயர்த்தி ஆசீர்வதிக்க வேண்டும்.

வசிஷ்டர் தம்மைப் பதிலுக்கு வணங்கினால், அவர் தம்மைப் பிரம்ம கைகளை உயர்த்தி விஸ்வாமித்திரருக்கு ஆசி கூறினார்.

வசிஷ்டரின் இந்தச் செயல் விஸ்வாமித்திரருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. ‘என்ன இது! நான் எவ்வளவோ கடுந்தவம் செய்து பிரம்மஞானம் அடைந்திருக்கிறேன்! அப்படியிருந்தும் இவர்




பிரம்மஞானம் பெறுவரரானால், அவரைப் பிராமணன் எறு சாஸ்திரங்கள் ஏற்றுக்கெள்க்கின்றன.

விஸ்வாமித்திரர் எனும் ரிஷி முனிவர் பிறவியில் க்ஷத்திரியர். அவர் வசிஷ்டருடன் ஏற்பட்ட போட்டியால், அவருக்கு நிகராக இருக்க வேண்டும் என விரும்பினார். ஆகையால் பிரம்மஞானம் பெற்று, நினைத்தார்.

அக்காலத்தில் ஒருவரை ஒருவர் வணங்குவதில் பல கருத்துக்கள் இருக்கும்.

பிரம்மஞானம் எய்திய பிராமணரைப் பிரம்மரிஷி என்று சொல்வது மரபு. அத்தகைய பிரம்மரிஷியை ஒருவர் வந்து வணங்கினால் வணங்க வந்தவர் தமக்குச் சமமாகப் பிரம்மஞானம் ஞானியாக ஒத்துக்கொள்கிறார் என்பது விளங்கிவிடும் என்று எதிர்பார்த்தார் விஸ்வாமித்திரர்.

விஸ்வாமித்திரர் வஷிட்டரின் ஆசிரமத்திற்கு வந்து அவரை வணங்கினார்.

தம்மை வணங்கிய விஸ்வாமித்திரர் வசிஷ்டர் பதிலுக்கு வணங்கவில்லை. மாறாக அவர் தம் என்னைப் பிரம்மரிஷி என்று ஏற்றுக்கொள்ளாமல் இப்படி ஆசீர் வதிக்கிறாரே!" என்ற எண்ணம் அவரது உள்ளத்தைப் புண்ணாக்கியது. எனவே மனம் நொந்த நிலையில் அவர் தம் ஆசிரமம் திரும்பினார். மீண்டும் தவத்தில் ஈடுபட்டார்.

பின்பு விஸ்வாமித்திரரின் கடும் தவத்திற்குமெச்சி,

அவருடைய இஷ்ட தெய்வம் ஒருநாள் அவர் முன் தோன்றி, "விஸ்வாமித்திரா! நீ நன்கு பிரம்ம ஞானம் அடைந்து விட்டாய். நீ போய் வசிஷ்டரை வணங்கு. அவர் மீண்டும் பதிலுக்கு உன்னை வணங்காவிட்டால், உடனே அவரது தலை சக்கல் சுக்கலாக வெடிக்க வேண்டும் என்று சாபம் கொடுத்துவிடு" என்று வறி மறைந்தார்.

விஸ்வாமித்திரர் வசிஷ்டரைக் காண வந்தார். முன்பு போலவே வசிஷ்டரை வணங்கி நிமிர்ந்தார்.

வசிஷ்டரும் தம்மை வணங்கிய விஸ்வாமித்திரரை எந்தவித மாற்றமுமின்றி முன்பு போலவே கையை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

நிமிர்ந்த விஸ்வாமித்திரருக்கு கோபம் பொங்கி எழுந்தது. "நான் இவ்வளவு தவம் செய்தும் என்னைப் பிரம்மஞானம் அடைந்தவன் என்ற ஏற்றுக்கொள்ளாத உங்களையும், உங்களைச் சேர்ந்தவர்களையும் நான் என்ன செய்கிறேன் பாருங்கள்!" என்று ராஜோகுணத்தின் வேகம் பொங்கிப் பெருகி, பூதாகரமாக வடிவெடுத்து, சாபம் கொடுக்க தயாரானார்.

ஆனால் திடீரென்று அவரிடம் ஒரு மாற்றம் அவர் இவ்வளவு காலம் செய்த தவ ஆற்றல் முழுவதும் நல்ல எண்ணங்களாக எழுந்தன.

"இப்போது வசிஷ்டர் பதிலுக்கு என்னை வணங்கிப் பிரம்மஞானம் அடைந்தவன் என்று என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தான் என்ன? நான் ஏன் இவ்வளவு கோப்பட வேண்டும்! கோபம் பாவத்திற்கு வழிகாட்டி அல்லவா! கோபத்தால் புத்தி தடுமாறுகிறது. புத்தித்தடுமாற்றத்தால் எல்லோரையும் சபிக்க நினைத்த சண்டாளனாக, பாவியாக நான் சிறிது நேரம் மாறிவிட்டேனே! கோபம், பொறாமை மற்றவர்களுக்குத் தீங்கு நினைப்பது போன்ற தீய எண்ணங்கள் என் உள்ளத்தில் உடனே எழுந்துவிட்டனவே! இவ்வளவு காலம் தவம் செய்தும் இன்னும் என் மனதில் இந்த தீய எண்ணங்கள் இருக்கின்றனவே; நான் என்ன பிரம்மஞானம் அடைந்திருக்கிறேன்?

உண்மையான தவம் என்றால் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யும் எண்ணமே வரக்கூடாது அல்லவா! ஐயோ! இத்தனை காலம் பாடுபட்டுச் சேமித்த தவ ஆற்றல் அனைத்தும் வீணாகிவிட்டதே! எவ்வளவு அற்பமானவனாக மாறிவிட்டேன்! எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். என்னிடமுள்ள அதே ஆத்மாதான் உயர்ந்தவையும், தாழ்ந்தவையுமான எல்லா உயிர்களிடமும் குடிகொண்டிருக்கிறது" என்று நினைத்தார். கணநேர உணர்ச்சிக்குப் பலியாகிவிட்ட தம் மன நிலையை எண்ணி அவர் வெட்கினார்.

பிறகு மீண்டும் காடு சென்று தவம் புரிய நினைத்து, விஸ்வாமித்திரர் வேகமாக நடக்கலானார்.

உடனே வசிஷ்டர் பின்தொடர்ந்து, "நில்லுங்கள், விஸ்வாமித்திரரே! நான் உங்களை வணங்க வேண்டாமா? திரும்பிப்பாருங்கள். தாங்கள் பிரம்மஞானம் அடைந்த பிராமணர் அல்லவா? தங்களை வணங்கி, உங்கள் வணக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

விஸ்வாமித்திரர் ஆச்சரியத்துடன் அவரைத் திரும்பிப்பார்த்தார். வசிஷ்டர் தம்மை வணங்கி நிற்பதைக் கண்டார்.

அவரருகில் சென்றபோது வசிஷ்டர் விஸ்வாமித்திரரைத் தம் மார்போடு அனைத்துக் கொண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் தம்மை கட்டித்தழுவிக் கொண்டார்கள்.

பிறகு வசிஷ்டர், "பிரம்மரிஷியே! தங்களின் பிறவிக்குணமான க்ஷத்திரிய ரத்தத்தின் சம்ஸ்காரம் நீங்கள் முதலில் வணங்கியபோது இருந்தது. ஆனால், இப்போதோ தாங்கள் முகத்தில் பிரம்மஞானம் அடைந்தவரின் ஒளியைக் காண்கிறேன். ரஜோ குணம் முற்றிலும் நீங்கிச் சுத்த சத்துவ குணத்தின் தேஜஸ் தங்கள் முகத்தில் தெரிகிறது. நீங்கள் இப்போதுதான் பிரம்மஞானம் அடைந்த பிரம்மணர். தாங்கள்தான் உண்மையான பிரம்மரிஷி" என்று வாழ்த்தினார்.

**ஒருவர் பிறவியில் பிராமணராகப் பிறந்திருந்தாலும், பிரம்மஞானம் பெற அவர் முயற்சி செய்யாதவரா கவே இருந்தால், அவரைப் பிரம ணன் என்று சாஸ்திரங்கள் ஏற்றுக் கொள்வதில்லை.**

**மாறாக ஒருவர் பிறவியில் வேறு குலத்தவராக இருந்தாலும், தவத் தால் பிரம்மஞானம் பெறுவரரா னால், அவரைப் பிராமணன் எறு சாஸ்திரங்கள் ஏற்றுக்கொள்கின் றன.**

மகம் என்றவுடன் அதன் சிறப்பைச் சொல்கிற சொல், மகத்தில் பிறந்தவர்கள் ஜெகத்தை ஆள்வார்கள் என்பதுதான். மக நட்சத்திரத்தை பித்ரு தேவதா நட்சத்திரம் என்று அழைப்பார்கள். இந்த பித்ருதேவதாதான் முன்னோர்களுக்கு ஆத்ம சாந்தியைத் தருகிறது. முன்னோர்கள் ஆத்ம சாந்தியுடன் இருந்தால் தான் அவர்களுடைய வம்சம் சுபிட்சமாக இருக்கும். உலகத்தை இறைவன் உருவாக்கு வதற்கு முன், பித்ருதே வனை உருவாக்கிய பிறகே தேவர்களையும், மனிதர்களையும் மற்ற ஜீவராசிகளையும் உருவாக்கினார் என்கிறது சாஸ்திரம். இதனால் முதல் மரியாதை யானது மக நட்சத்திரத்திற்கு உரிமை உடைய பித்ருதேவ னுக்குதான். எந்தச் சுபநிகழ்ச்சி நடந்தாலும் பித்ருக்களை வணங்கினால் அந்த சுபநிகழ்ச்சி தடையில்லாமல் நடக்கும். பித்ருதேவனின் ஆசியும் கிடைக்கும். அதனால் தான் மாசிமகம் தினத்தன்று பித்ருக்களுக்கு பூஜை செய்யவேண்டும். மாசிமக தினத்தன்று புனித நதிகளில் நீராடுவதை பிதுர் மஹா ஸ்நானம் என்கிறது சாஸ்திரம். கும்பகோணம் முன்னொரு காலத்தில் மிகப்பெரிய பிரளயம் உண்டாகி, உலகமே அழியும் தருணம் ஏற்பட இருந்தது. இதை தன் ஞானத்தால் அறிந்த பிரம்மன், சிவபெருமானிடம் முறையிட, அதற்கு ஈசன், நீ எதற்கும் கலங்காதே. பிரளயம் ஏற்பட்டாலும் மீண்டும் அனைத்து ஜீவராசிகளும் உருவாகும். என்று கூறி, ஒரு கும்பத்தை கொடுத்து, இதில் நீ படைத்த அனைத்து ஜீவராசிகளின் மூல காரணமாக இருக்கும் வித்துக்களை இதனுள் வைத்து விடு. அத்துடன் புராணங்களையும், மந்திரங்களையும் அதனுடன் வைத்து பூஜை செய். பிறகு அந்த கும்பத்தை மேரு மலையில் வைத்து விடு. அதன் பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன். என்றார் பிரம்ம தேவரிடம் சிவ பெருமான். சிவபெருமானின் உத்தரவின்படி செய்தார் பிரம்ம தேவர். சில நாட்களுக்கு பிறகு மிகப் பெரிய பிரளயம் ஏற்பட்டு உலகமே அழிந்து போனது. மேருமலையில் பிரம்மன் பூஜித்து வைத்த கும்பம், தண்ணீரில் மிதந்து வந்து ஒரு இடத்தில் நின்றது. அந்த இடத்தில் சிவபெருமான், ஒரு வேடன் உருவத்தில் வந்து, அந்தக் கும்பத்தை நோக்கி அம்பு எய்தபோது கும்பத்தின் கூம்பு போன்ற கோணப்பகுதி உடைந்தது. அந்த கும்பம் தண்ணீரில் மிதந்து வந்த இடமும், வேடன் உருவத்தில் சிவபெருமான் கும்பத்தின் ஒரு மூக்கு போன்ற கோணப்பகுதி உடைத்த இடமும் ஒரே இடம் என்பதால், அந்த இடத்திற்கு கும்பகோணம் என்று பெயர் உண்டானது. கும்பம் உடைந்த போது அதில் இருந்து அமுதமும் வெளியேறியது. அந்த அமுதம் நனைத்த மணலால் ஒரு சிவலிங்கத்தை உருவாக்கி, அதில் சர்வேஸ்வரர் ஐக்கியமானார். இதனால் அந்த சிவலிங்கம், ஆதி கும்பேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது. கும்பத்தின் மூக்கு உடைந்த இடம் என்பதால் கும்பக்கோணம், குடமூக்கு என்ற பெயரும் பெற்ற ஸ்தலம் ஆகும். மாசி மகம் அன்று கும்பகோணத்தில் விசேஷமாக கொண்டாடுவார்கள். அதேபோல், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகத் திருவிழா மிகவும் புகழ் பெற்றது. மாசி மகத்திற்கு சக்தி அதிகம் மாசி மகத்திற்கு சக்தி அதிகம் என்பதை மற்றவர்கள் உணர்வதற்கு முன்னே புண்ணிய நதிகள் என்று சொல்லக்கூடிய கங்கை, காவேரி, யமுனை போன்ற பல புண்ணிய நதிகள் உணர்ந்தார்கள். ஒருவருடைய கஷ்டத்தை கேட்டுக்கொண்டே இருந்தால் கேட்பவர்களுக்கும் அந்த கஷ்டம் வரும். அதனால்தான் நம் முன்



னோர்கள் கூறுவார்கள், ஒருவரை பார்த்து ஐயோ பாவம் என்றால், சொல்பவர்களுக்கு ஈரேழு ஜென்மபாவங்கள் தேடி வரும். அந்த அளவில் சக்திபடைத்து துஷ்ட தேவதை. துஷ்டதேவதை தான் கஷ்டத்தை தருவது. இந்த துஷ்ட தேவதை மனிதர்களிடம் மட்டும் தன் வேலையைக் காட்டுவதில்லை. பலருடைய பாவங்களைத் தீர்க்கும் புண்ணிய நதிகளிடத்திலும் தன் வேலையை காட்டியது. ஆம். பலருடைய கர்மாக்களை புண்ணிய நதிகள் நீக்கியதால், நதி தேவதைகளின் உடல் கருமையாக மாறி கஷ்டத்திற்கு ஆளானார்கள். இந்த நிலை தீர என்ன செய்ய வேண்டும்? என்று சிவபெருமானிடம் கேட்டார்கள். அதற்கு இறைவன், நீங்கள் மாசி மாதம் மக நட்சத்திரத்தில் கும்பகோணம் மகா மகக்குளத்தில் நீராடினால், உங்கள் பாவங்கள் நீங்கும். என்றார். சர்வேஸ்வரன் கூறியது போல், மகாமக குளத்தில் நீராடி தங்களுடைய பாவத்தைப் போக்கிகொண்டார்கள் அந்தப் புண்ணியநதி தேவதைகள். பாவம் தீர கங்கை, யமுனை போன்ற புண்ணிய நதியில் குளித்தால் ஒருவருடைய கர்மாக்கள் நீங்கும் என்பார்கள். ஆனால் அங்கேயே பிறந்தவர்களின் கர்மபயன் தீர வேண்டும் என்றால், கும்பகோணம் மகாமக குளத்தில் நீராடினால்தான் நீங்கும் என்கிறது புராணம். எப்படி மருத்துவர் தனக்கு தானே அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியாதோ, அதுபோல் தான், எந்த புண்ணிய நதிகரையில் பிறந்தவர்களாக இருந்தாலும், மகாமகுளத்தில் நீராடினால் தான் கர்மாக்கள் நீங்கும். என்கிறது சாஸ்திரம். புண்ணிய நதியில் நீராடினால் கர்மபயன் நீங்குமா? என்ற சந்தேகத்தோடு நீராடக்கூடாது. இதற்கு ஒரு கதை இருக்கிறது ஒரு முனிவர் இருந்தார். அவர் பல வருடங்களாக மக்களுக்கு உபதேசங்கள் செய்து வந்தார். ஒருநாள் கருடன் பறக்கும்போது தன் சிறகு இழந்து, அந்த



முனிவர் காலில் வந்து விழுந்தது. இதை கண்ட முனிவர் தன் கமண்டலத்தில் இருந்த நீரை அந்த கருடன் மேல் தெளித்தார்.

உடனே அது வலிமை பெற்று பறந்து சென்றது. இதை கண்ட பக்தர்கள், சாமி உங்களிடம்தான் நாங்கள் தினமும் உபதேசம் கேட்கிறோம். எங்களுக்கும் உடல் உபாதைகள் வந்தபோது, நீங்களே எங்களை குணப்படுத்தி இருக்கலாமே. என்றார்கள். அதற்கு அந்த முனிவர், அந்த கருடன் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் என்னிடம் சரண் அடைந்தது. நான் அதை குணப்படுத்துவேனா அல்லது மாட்டேனா? என்ற சந்தேகம் அந்த கருடனுக்கு இல்லை. அதனால் அந்த கருடன் குணம் அடைந்தது. ஆனால் என் மேல் உங்களுக்கு சந்தேகம் இருந்தது. எனக்கு சக்தி இருக்கிறதா என்ற சந்தேகம் உங்கள் மனதில் அதிகமாகவே இருப்பதால், நன்மைகள் கிடைக்கத் தாமதமாகிறது. குழம்பிய மனம் குப்பைக்கு சமமானது. நம்பிக்கை யோடு இருந்தால் தான் எல்லாமே நன்மையாக முடியும். என்றார் அந்த மகான். ஆம் அதுபோல, மகாமக குளத்தில் நீராடினால் கர்மவினை நீங்குமா? என்ற சந்தேகத்துடன் குளித்தால் நீங்காது. நீங்கும் - சுபிக்ஷம் ஏற்படும் என்று ஆணித்தர

**மகாமக குளத்தில் நீராடினால் கர்ம வினை நீங்குமா? என்ற சந்தேகத்துடன் குளித்தால் நீங்காது. நீங்கும் - சுபிக்ஷம் ஏற்படும் என்று ஆணித்தரமாக நம்ப வேண்டும். அப்படி நம்பினால்தான் நன்மைகள் நிழல் போல் தொடர்ந்து வரும்.**

மாக நம்பவேண்டும். அப்படி நம்பினால்தான் நன்மைகள் நிழல் போல் தொடர்ந்து வரும். தாட்சாயினி அம்மன் தக்ஷன் தனக்கு சக்திதேவியே மகளாக பிறக்க வேண்டும் என்று விரும்பி வரம் பெற்றார். அதன்படி சிவனின் கட்டளையை ஏற்று ஈஸ்வரி, இமயமலைச் சாரலில் காளிங்க நதியில் ஒரு வலம்புரிச் சங்காக மாறித் தவம் இருந்தார். மாசி மாதம் பௌர்ணமி அன்று, அந்தப் பக்கமாக வந்த தக்ஷன் கண்ணில் வெண்மையான வலம்புரி சங்கு தெரிந்தது. அந்த சங்கை தன் இரு கரங்களால் எடுத்தவுடன் அந்த வலம்புரிசங்கு குழந்தையாக மாறியது. அந்த பெண் குழந்தைக்கு தாட்சாயினி என்று பெயர் வைத்தான் தக்ஷன். சிவபெருமானுக்கும் தக்ஷனுக்கும் ஏற்பட்ட தகராறில் தாட்சாயினி தீக்குள் விழுந்தாள். ஆனாலும் இறைவியின் உடல்உறுப்புகள் விழுந்த பகுதிகள் எல்லாம் சக்தி பீடங்களாக உருவெடுத்து உலகம் முழுவதும் தோன்றி உலக நாயகியாக பக்தர்களை காக்கிறாா். மகத்திற்கு அழிவே இல்லை. அதுவும் மாசிமகம் இன்னும் சக்தி படைத்தது. அதனால் தாட்சாயினியாக அம்மன் மக நட்சத்திரத்தில் தோன்றிய பிறகுதான் சக்தி பீடங்கள் உருவாகி உலகநாயகியாகப் போற்றப்படுகிறார் அன்னை சக்திதேவி. மாசிமகம் அன்று சிவபெருமானையும், ஸ்ரீவிஷ்ணு பகவானையும் பித்ருக்களையும் வணங்கினால் சகலநலன்களையும் பெற்று வளமான வாழ்க்கை அமையும்.!

- நிறைஞ்சனா

# கருங்கல்லில் தெய்வ சிலைகள் வடிப்பது ஏன்?



ஆகம விதிகளின் படி கருங்கல் லால் கட்டப்பட்ட பழங்காலக் கோவில்களிலும் வேத,ஆகம ,சிற்ப சாஸ்திர முறைப்படி,யந்திர ஸ்தா பனம் செய்து, தெய்வ உருவங் களை கருங்கல் சிலையாக பிரதிஷ்டித்து தினமும் முறையாக பூஜை செய்து வரும் கோவில் களுக்கு நாம் சென்று தரிசனம் செய்யும் வேளையில்,நம் உடலில் ஓர் சக்தி ஊடுருவிச் செல்வத்தை அனுபவ பூர்வமாக பலர் உணரலாம்.

ஆகவே தான்,பெரும்பாலும் சிலைகளை கருங்கல்லில் வடிவமைக்கிறார்கள். பெரும்பாலும் தெய்வ சிலைளை உலோகங்களில் செய்யாமல், கருங்கல்லால் சிலை செய்கிறார்கள்.அதற்கு முக்கியமான கரணம் உண்டு.

உலோகத்தின் ஆற்றலை விட கருங்கல்லின் ஆற்றல் பல மடங்கு அதிகமானது.எந்த சக்தியையும் தன் வசம் இழுத்துக் கொள்ளும் தன்மைஉடையது கருங்கல்.இதில் நீர்,நிலம் ,நெருப்பு ,காற்று,ஆகாயம் எனும் பஞ்ச பூத தன்மைகள் அடங்கியுள்ளது.இது வேறு எந்த உலோகத்திலும் வெளிபடுவது இல்லை.

**நீர்:**

கல்லில் நீர் உள்ளது.எனவே தன் தனது இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமலிருக்கிறது.கல்லில் நீருற்று இருப்பதை காணலாம்.

**நிலம்:**

பஞ்ச பூதங்களில் தத்துவங்களில் ஒன்றான நிலம் உள்ளதுணவே கல்லில் செடி கொடிகள் வளர்கின்றன.

**நெருப்பு:**

கல்லில் நெருப்பின் அம்சமும் உண்டு.கற்களை உரசினால் தீப்பொறி பறக்கிறதே சான்று.

**காற்று :**

கல்லில் காற்று உண்டு.எனவே தான் கல்லில் தேரை கூட உயிர் வாழ்கிறது.

**ஆகாயம்:**

ஆகாயத்தைப் போல் ,வெளியிலிருக்கும் சப்தத்தை தனக்கே ஒடுக்கி பின் வெளியிடும் சக்தி கல்லுக்கு உண்டு.எனவே தான் கருங்கல்லில் கட்டப்பட்ட'கோவில்களில் நாம் கூறுவதை எதிரொலிக்கும் அதிசயம் நடக்கிறது.திருவையாறு ஐயாரப்பன் கோவிலில் நாம் பேசுவது அப்படியே எதிரொலிப்பதை நாம் ஆனந்தமாக கேட்டு மகிழலாம்.

இக்காரணங்களினால்,இறை வடிவங்களை பஞ்ச பூதங்களின் (ஐம் பூதங்களின்) வடிவில் இருக்கும் கருங்கல்லில் வடிவமைத்து வழிபாடு செய்கிறோம்.

அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகள் முறைப்படி செய்யும் போது ,ஒரு கோவிலின் பஞ்சபூதங்களின் தன்மை அதிகரிக்கின்றன. அக்கோவிலில் நாம் வணங்கும்போது , நம் உடலில் நல்ல அதிர்வுகள் உண்டாகி ,அதன் மூலம் நம் வாழ்வில் நல்ல பலன்கள் உண்டாகின்றன.



# திருநீற்றின் மகிமை

நெருப்பில் இடப்படுபவை எல்லாம் நீற்றுவிடும். கடைசியில் இருப்பது இந்த விபூதி தான். விபூதி உள்ள இடத்தில் தரித்திரம் இருக்காது. புஸ்பம் என்னும் விபூதி மன அழுத்தம் நீக்கும். அதனால் அதை நெற்றியில் அணிய வேண்டும். விபூதி ஜலதோசத்திலிருந்து நம்மைக் காக்கும்.

ஆன்மாக்களை காத்து இரட்சிப்பதால் இரட்சை என்றும், தீவினைகளை நீறுபடுத்துவதால் திருநீறு எனவும் அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும் ஆன்மாக்களின் மலமாசைக் கழுவுவதால் சாரம் எனவும் அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பசிதம் எனவும் பெயர் பெற்றது.

நெற்றியில் விபூதி அணிவதால் பில்லி, சூனியம் போன்றவை ஒன்றும் செய்ய முடியாது. மனதை மயக்கவும் முடியாது. இறைவன் நாமத்தைக் கூறியபடி நெற்றியிலும் இரண்டு புஜங்களிலும் தோள் பட்டைகளிலும் மூன்று விரல்களால் இட்டுக் கொள்ள வேண்டும். அப்போது ஓம் நமச்சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை சொல்ல வேண்டும்.



# செய்யும் தொழிலே தெய்வம்

ஒரு பணக்காரன் பூந்தோட்டம் வைத்திருந்தான். தோட்டத்தைப் பராமரிக்க இரு வேலையாள்கள் இருந்தனர். ஒருவன் சோம்பேறி. வேலையே செய்யமாட்டான். பகலெல்லாம் தோட்டத்தில் தூங்குவான். ஆனால், முதலாளியின் தலையைக் கண்டதும் ஓடிச் சென்று தலைக்கு மேல் கும்பிடு போட்டு நிற்பான். அவர் உடுத்தியிருக்கும் ஆடை, ஆபரணத்தைப் புகழ்ந்து பேசி நடிப்பான். இன்னொரு வேலை யாளோ 'தானுண்டு தன் வேலை யுண்டு' என்றிருப்பான். அவன் எண்ணம் எல்லாம் தோட்டத்தை மட்டுமே சுற்றிக் கொண்டிருக்கும். பூச் செடிக்கு தண்ணீர்விடுவது, பாத்தி அமைப்பது என்று நாள் முழுவதும் கடுமையாகப் பாடுபடு வான். முதலாளியை புகழ்ச்சியாக பாராட்டியதில்லை. எதுவும் பேசாமல் அவர் முன் அடக்கத்துடன் நிற்பான்.

சோம்பேறியின் ஏமாற்றுவேலை எத்தனை நாள் பலித்துவிடும்? உண் மையை அறிந்த முதலாளி, ஒரு நாள் சோம்பேறியை தோட்ட வேலை யில் இருந்து வெளியேற்றினார். நல்லவனை பாராட்டியதோடு, அவ னுக்கு சன்மானமாகப் பெரும் பொருள் கொடுத்து மகிழ்ந்தார். பூந்தோட்டம் போன்றது தான் இந்த உலகம். இதற்கு கடவுள் தான் முதலாளி. இங்கே இருவிதமான மனிதர்கள் வாழ்கிறார்கள். ஏமாற்றும் குணம் படைத்து, கடவுளின் புகழ்பாடி பக்தி செய்கிறோம் என்று சொல்பவர்கள் ஒருபுறம். தன் கடமை அறிந்து உலகுக்குப் பயனுடையவர்களாக வாழவேண்டும் என்ற லட்சியம் கொண்ட உழைப்பாளிகள் மறுபுறம். உண்மையில், உலகின் இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்கும் உழைப்பாளிகளே கடவுளின் அன்பிற்கு பாத்திரமானவர்கள்.



# தேவி ஸ்தோத்திர மாலை

"தேவி மாகாத்மியம்" எனும் நூலிலே தேவர்கள் அம்பிக்கையைப் போற்றித்துதித்து வணங்குவதாய் அமைந்த தோத்திரப் பாடல்களை அடியார்கள் பாராயணஞ் செய்து பலனடைய மந்திரம் போன்ற சக்தியுள்ள ஸ்லோகங்களும் கருத்துடன் தரப்பட்டுள்ளன. விரும்பும் அடியார்கள் தக்க சுலோகங்களை நாடோறும் காலையிலும் மாலையிலும் தக்கவாறு தூயதாகப் பாராயணம் ஜபம் செய்து பலன்பெற விழைவார்களாக.

**ஸ்தோத்திரம்**

1.யாதேவீ ஸர்வ பூதேஷு
விஷ்ணுமாயேதி சப்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

2. யாதேவீ ஸர்வ பூதேஷு
சேதநேத்ய பிதியதே!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

3. யாதேவீ ஸர்வ பூதேஷு
புத்தி ரூபேண ஸம்ஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

4. யாதேவீ ஸர்வ பூதேஷு
நித்ரா ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

5.யாதேவீ ஸர்வபூதேஷு
க்ஷு தா ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

6. யாதேவீ ஸர்வ பூதேஷு
சாயா ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

7. யாதேவீ ஸர்வ பூதேஷு
சக்தி ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

8. யாதேவீ ஸர்வ பூதேஷு
த்ருஷ்ணா ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

9. யாதேவீ ஸர்வ பூதேஷு
சாந்தி ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

10.யாதேவீ ஸர்வ பூதேஷு
ஜாதி ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

11. யாதேவீ ஸர்வ பூதேஷு
லஜ்ஜா ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

12. யாதேவீ ஸர்வ பூதேஷு
சாந்தி ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

13.யாதேவீ ஸர்வ பூதேஷு
ஸ்ரத்தா ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

14. யாதேவீ ஸர்வ பூதேஷு
காந்தி ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

15.யாதேவீ ஸர்வ பூதேஷு
லக்ஷ்மீ ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

16. யாதேவீ ஸர்வ பூதேஷு
வ்ருத்தி ரூபேண ஸமஸ்த்திதா:
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம:

17. யாதேவீ ஸர்வ பூதேஷு
ஸ்மிருதி ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

18.யாதேவீ ஸர்வ பூதேஷு
தயா ரூபேண ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

19. யாதேவீ ஸர்வ பூதேஷு
துஷ்டி ரூபேண
ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ்
தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

20. யாதேவீ ஸர்வ பூதேஷு
மாத்ரு ரூபேண
ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ்
தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!


21. யாதேவீ ஸர்வ பூதேஷு
ப்ராந்தி ரூபேண
ஸமஸ்த்திதா!
நமஸ் தஸ்யை நமஸ்
தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

22. இந்த்ரியாணாம்
அதிஷ்டாத்ரீ
பூதாநாம்ச அகிலேஷ்யா!
பூதேஷு ஸததம் தஸ்யை
வ்யாப்த்யை தேவ்யை நமோ
நம!!

23. சிதி ரூபேணே யாக்ருத்ஸ
நம்ஏதத் வ்யாப்ய ஸ்திதா ஜகத்!
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை
நமஸ் தஸ்யை நமோ நம!!

24.ஸ்துதா ஸுரை பூர்வம்
அபீஷ்ட சம்ஸ்ரயாத்
ததா சுரேந்த்ரேண திநேஷு ஸேவிதா!
கரோ துஸா நஸ் சுபஹேது ரீஸ்வரீ
சுபாநி பத்ராணி அபிஹந்து சாபத!!

25. யா ஸாம் ப்ரதம் சோத்தத
தைத்ய தாபிதை
அஸ்மாபிரீசா சஸுரைர்
நமஸ்யதே!
யாசஸ்மிருதா தத்க்ஷணமேவ
ஹந்தி ந!!
ஸர்வாபதோ பக்தி விநம்ர மூர்த்தி பீ!!



# அனைத்துச் செல்வங்களும் கூர்ம அவதாரம்

பெருமாளின் அவதாரங்களில் கூர்ம அவதாரம் மனித குலத்திற்கு தேவையான செல்வங்களை அளிக்கவே நிகழ்ந்ததுபோல் இருக்கிறது. அசுரர்களை வதம் செய்து, தேவர்களைக் காக்கப் பெருமாள் திருவுளம் கொண்டதால் ஏற்பட்ட அவதாரம். இந்த அவதாரம் எடுக்க துர்வாச முனிவர்தான் காரணம் என்றே சொல்லலாம்.

துர்வாச முனிவர் கோபத்திற்கும் சாபமிடுவதற்கும் பெயர் பெற்றவர். இவரிடம் பெருமாளின் பிரசாதமான பூ மாலை ஒன்று இருந்தது. அவர் மூவுலக சஞ்சாரி. அவ்வாறு அவர் தேவலோகம் வழியாகச் சென்ற போது, தேவேந்திரன் அவ்வழியே தனது யானை மீதேறி வந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த துர்வாசர் தன்னிடம் இருந்த மாலையை அவனுக்கு அளித்தார். அவனோ அதனை வாங்கி, யானையின் மத்தகத்தில் வைத்தான். யானையோ அதைத் தும்பிக்கையால் எடுத்துத் தன் காலில் இட்டு மிதித்தது. துர்வாசருக்கு வந்ததே கோபம். அகந்தையால் நீயும் உன் குழுவினரும் பலமற்றுப் போவீர்கள் என சபித்துவிட்டார்.

துர்வாசர் மிகுந்த தபஸ்வி. அவர் வாக்கு பலிக்கத் தொடங்கியது. தேவர்கள் பலமிழந்தார்கள். அசுரர்கள் பலங்கொண்டு தேவர்களுடன் போரிட்டார்கள். போரில் மடிந்த தேவர்கள், மடிந்தபடியே இருக்க, அசுரர்கள் மாண்டபோது அவர்களது குருவான சுக்கிராச்சாரியார் தனது தவ வலிமையால் அவர்களை மீண்டெழச் செய்தார். இதனால் தேவர்களின் எண்ணிக்கை குறைய, அசுரர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இந்தப் பிரச்சினையில் இருந்து மீள வேண்டி, பிரம்மா தலைமையினாலான தேவர்கள் மகா விஷ்ணுவை அணுகினார்கள். அவர் வழியொன்று கூறினார். பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும்; அதனை தேவர்கள் உண்டால் சாகா வரம் பெற்று வாழலாம் என்றார் மகா விஷ்ணு.

பாற்கடலைக் கடைய வேண்டும் என்றால் அவ்வளவு பெரிய மத்து வேண்டுமே. அதனைச் சுற்றி இழுக்கக் கயிறு வேண்டுமே. பலமற்ற தேவர்களைக் கொண்டு எப்பொழுது கடைந்து முடித்து, எப்பொழுது அமிர்தம் எடுப்பது என்ற பல கேள்விகள் எழுந்தன.

மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்ற ஆயிரம் தலை கொண்ட பாம்பைக் கயிறாகவும் கொண்டு, வெளி வர இருக்கிற அமிர்தத்தில் பங்கு தருவதாகக் கூறி பலமாக உள்ள அசுரர்களையும் சேர்த்துக்கொண்டு பாற்கடலைக் கடையுமாறு கூறினாராம் பெருமாள். பலமற்றுத் தொய்ந்து போயிருந்த தேவேந்திரன் அசுரர்களிடம் சென்று பேசினான். அசுரர்கள் அவனைக் கண்டு எள்ளி நகையாடினார்கள். அதனைப் பொருட்படுத்தாத தேவேந்திரன் அசுரர்களின் பங்களிப்பை வேண்டி நின்றான். சுக்கிராச்சாரியாரின் அறிவுரைப்படி அசுரர்கள் முழுமையான ஒத்துழைப்பைத்தர ஒப்புக் கொண்டனர். ஆனால் மந்தார மலையை கொண்டு சென்று கடலிலே போட்டு வாசுகியையும் கயிறாக்கித் தயார் செய்யுங்கள். அப்போது அங்கு வந்த அசுரர்கள் நாகத்தின் வாய்ப்புறப் பகுதியில் நின்று கடைய உதவுகிறோம் என்றார்கள். தேவர்கள் மந்தார மலையைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார்கள்.

அப்போது பாதியிலேயே

துர்வாச முனிவர் கோபத்திற்கும் சாபமிடுவதற்கும் பெயர் பெற்றவர். இவரிடம் பெருமாளின் பிரசாதமான பூ மாலை ஒன்று இருந்தது. அவர் மூவுலக சஞ்சாரி. அவ்வாறு அவர் தேவலோகம் வழியாகச் சென்றபோது, தேவேந்திரன் அவ்வழியே தனது யானை மீதேறி வந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த துர்வாசர் தன்னிடம் இருந்த மாலையை அவனுக்கு அளித்தார். அவனோ அதனை வாங்கி, யானையின் மத்தகத்தில் வைத்தான். யானையோ அதைத் தும்பிக்கையால் எடுத்துத் தன் காலில் இட்டு மிதித்தது. துர்வாசருக்கு வந்ததே கோபம். அகந்தையால் நீயும் உன் குழுவினரும் பலமற்றுப் போவீர்கள் என சபித்துவிட்டார்.

மலையைக் கீழே போட்டுவிட அதனடியில் மாட்டிக்கொண்ட தேவர்கள் நசுங்கத் தொடங்கினர். கருடாரூடனான பெருமாள் உடனடியாக அங்கு வந்து, கருடனின் காலினால் மலையைத் தூக்கிக் கடலில் போட்டார். உடனடியாக வாசுகி நாகமும் மலையைச் சுற்றிக்கொண்டது. இரு தரப்பிலும் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். கனமான மந்தார மலை மூழ்கத் தொடங்கியது. தேவர்களும் அசுரர்களும் செய்வதறியாது திகைத்தனர். பெருமாள் ஆமையாக மாறி, மலைக்கு அடியில் சென்று தாங்கினார். இதுவே கூர்ம - ஆமை அவதாரம்.

தேவர்களும் அசுரர்களும் கடையத் தொடங்க, வாசுகி தாங் கொண்ண வலியால் விஷம் கக்கியது. உலகோரைக் காப்பதில் விருப்பம் கொண்ட பரமேஸ்வரன் இந்த விஷத்தைத் தான் உண்டு உலகைக் காக்க விரும்பினார். பார்வதி தேவி அனுமதிக்க, விஷத்தைத் துளியும் வீணாக்காமல் உருட்டி எடுத்து விழுங்கினார். அன்னை பார்வதி தன் மணாளன் கழுத்தைப் பிடிக்க, விஷம் சிவனின் கண்டத்தில் (தொண்டை) நின்று விட்டது. இதனால் நீல கண்டன் என்ற காரணப் பெயர் பெற்றார் சிவபெரு மான். இந்நிகழ்ச்சி நடைபெற்ற நேரம் மாலைப் பொழுது. அதுவே இன்றும் பிர தோஷ காலமாகக் கொண்டாடப் படுகிறது.

> தேவர்கள் மந்தார மலையைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார்கள். அப்போது பாதியிலேயே மலையைக் கீழே போட்டுவிட அதனடியில் மாட்டிக் கொண்ட தேவர்கள் நசுங்கத் தொடங்கினர். கருடாரூடனான பெருமாள் உடனடியாக அங்கு வந்து, கருடனின் காலினால் மலையைத் தூக்கிக் கடலில் போட்டார். உடனடியாக வாசுகி நாகமும் மலையைச் சுற்றிக்கொண்டது. இரு தரப்பிலும் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். கனமான மந்தார மலை மூழ்கத் தொடங்கியது. தேவர்களும் அசுரர்களும் செய்வதறியாது திகைத் தனர். பெருமாள் ஆமையாக மாறி, மலைக்கு அடியில் சென்று தாங்கினார். இதுவே கூர்ம - ஆமை அவதாரம்.

தடை நீங்கிய பிறகு கடையத் தொடங்கியவுடன் முதலில் வந்தது காமதேனு என்னும் வேண்டியதையெல்லாம் வழங்கும் பசு. பின்னர் வரிசையாகப் பொன்மயமான ஒளியை உடைய உச்சைசிரவஸ் என்னும் பறக்கும் குதிரை, நான்கு தந்தங்கள் கொண்ட வெண்ணிற யானை ஐராவதம், பஞ்ச தருக்கள், கற்பக மரம், கவுஸ்துப மணிமாலை, மூதேவி, அறுபது கோடி தேவகன்னி யர், மது, மதுவின் அதிதேவதை சுராதேவியுடன் பல பெண்கள்,



ஆதிலஷ்மி எனப்படும் மகாலஷ்மி, சந்திரன், ஸ்யமந்தமணி என்னும் சிந்தாமணி, கடைசியாக அமிர்த கலசம் ஏந்தி தன்வந்திரி ஆகியோர் வெளிப்பட்டனர். இவை அனைத்தும் வானோருக்கும் உலகோருக்கும் கூர்மாவதாரம் தந்த பரிசு.

### அழகிய கண்ணும் பெருமாள் அவதாரமும்

மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன அவதார மூர்த்தியை ராம, கிருஷ்ண, பௌத்த, பலராம, கல்கி, அவதார மூர்த்தியை தியானித்தெழுந்தேன்; தியானித்தெழுந்தேன்; தியானித்தெழுந்தேன். என்ற எளிய கிராமியப் பாடல் விஷ்ணுவின் அவதாரங்களைக் கூறும். ஒரு சிறந்த விஷ்ணு பக்தர் இருந்தார். அவர் எப்போதும் சொல்வாராம் கிருஷ்ணா நீ எங்கே இருந்தாலும் உன்னைக் கண்டுபிடித்துவிடுவேன் என்று. அதற்கு எப்படிக் கண்டுபிடிப்பாய் என்று கேட்டு அதன் சூட்சுமத்தை அறிய விரும்பினாராம் கிருஷ்ணர். அதற்கு இந்த பக்தர் கூறினாராம் நீ மச்சாவதாரம் என்ற மீனின் அவதாரம் எடுத்தாயே அப்பொழுது, தண்ணீரில் இருந்த எல்லா மீன்களுக்கும் கண்கள் வட்டவடிவமாக இருந்தது. ஆனால் நீ மீனாக இருந்தபோது செவ்வரி ஓடிய தாமரை இதழ் போல் உன் கண்கள் நீளமாக இருந்ததே. அரவிந்த நயனா என்றாராம் பக்தர். மச்ச அவதாரம் மட்டுமல்ல கூர்ம, வராக, நரசிம்ம என்று பல விலங்கின அவதாரங்களை எடுத்தாயே அப்போதும் உன் கண் மலர்கள் உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டன கிருஷ்ணா என்று கூறினார்.



# வீட்டில் விளக்கு ஏற்றுவதால் உண்டாகும் நன்மைகள்

மிகப் பழங்காலத்தில் இருந்தே விளக்கேற்றுவது என்பது வழிபாட்டின் முக்கியமான பகுதியாக இருந்திருக்கிறது. வீட்டில் மகாலட்சுமி என்றும் நிலைத்திருக்க விளக்கு ஏற்றுதல் மிகவும் அவசியம். அதாவது, பிரம்ம முகூர்த்தத்தில் விளக்கேற்றுவது மிகவும் நல்லது. சூரிய உதயத்துக்கு ஒரு நாழிகை முன்னாலும், மாலையில் சூரிய அஸ்தமனத்துக்கு ஒரு நாழிகை முன்னாலும் (ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்கள்) விளக்கு ஏற்ற வேண்டும். இரவு, பகல் மாற்றம் ஏற்படும்போது சுற்றுப்புற சூழலில் நிகழும் சில மாற்றங்களால் விஷப் பாதிப்பு உண்டாகும். விளக்கிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் இந்தப் பாதிப்பைத் தடுக்க வல்லது. இதை முன்னிட்டே அதிகாலையிலும், மாலையிலும் விளக்கு ஏற்றச் சொன்னார்கள் நம் முன்னோர்கள். தினசரி இரண்டு தீபங்கள் ஏற்ற வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் குத்துவிளக்கில் ஐந்துமுக தீபம் ஏற்றி, மகாலட்சுமி பூஜை செய்வது மிகவும் சிறந்தது. சில பரிகாரங்களுக்காக மண்ணாலான அகல விளக்கில் நெய் தீபம் ஏற்றுவது மிகவும் சிறந்தது. தீபம் ஏற்ற பஞ்சு திரியே மிகவும் சிறந்தது. நல்லெண்ணெய், நெய் இவற்றைப் பயன்படுத்தி விளக்கேற்ற மாங்கலம் நிலைக்கும்.



# ஆராத்தி எடுப்பது ஏன் தெரியுமா?

நம் முன்னோர்கள் கடைப் பிடித்த பாரம்பரிய நடவடிக்கை கள் ஒவ்வொன்றும் நம் நல னுக்காக ஏற்படுத்தப்பட்டவை. ஆனால் நம் தலைமுறை அதை சரியாக உணர்வதில்லை. தமி ழர் பாரம்பரிய நடவடிக் கைகளில் முக்கியமானது ஆரத்தி எடுக்கும் நடைமுறை. ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை பின்பற்றப் படும் இந்த நடைமுறை வெறும் சடங்குக்காக செய்யப்படுவ தில்லை. சாதாரண நிகழ்வாக இதை புறக்கணிக்கிறோம். ஆனால் இதில் ஆழமான அர்த்தம் அது வும் விஞ்ஞான நலன் காணப் படுகிறது. இதில் முக்கியமான கருத்துகள் மறைந்துள்ளது.

தூரத்து பயணம் முடித்து வருபவர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஆராத்தி எடுப்பது...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு புதிதாய் திருமணம் முடித்து வீட்டுக்கு வரும் மணமக்கள் மகப்பேறு முடித்து வீட்டுக்கு வரும் பெண் ஆகியோ ருக்கு ஆராத்தி எடுக்கும் நடை முறை வழக்கத்தில் உள்ளது. ஆர த்தி எடுப்பது என்றால் ஒரு தாம் பாளத் தட்டில் தண்ணீரில் மஞ்சள் அரைத்து சேர்த்து அதில் சிறிது சுண் ணாம்பு சேர்த்து கலக்க வேண்டும். மஞ்சளும் சுண்ணாம் பும் கலந்த தண்ணீருக்கு சிவப்பு நிறம் வருகி றது. இதை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து அதற்கு இரு பக்கங்களிலும் இரண்டு தீச்சுடர் எழுப்பி சம்பந் தபட்ட நபரின் உட லுக்கு சுற்றும் 3 முறை சுற்றி விடுவ தையே ஆராத்தி என்று கூறி வருகிறோம்.

ஒவ்வொரு மனிதனை சுற்றிலும் ஆரா என்ற சூட்சுமப் பகுதி இருக் கிறது. மனிதனுக்கு ஏற்படும் திருஷ்டி மற்றும் அவனைச் சேரும் தீய கிருமிகள் ஆகியவை ஆந்த சூட்சுமம் பகுதி யில் முதலில் பதிந்து பின்னரே அவனுள் புகுகின்றன. திரும ணம், குழந்தை பெறுதல், வெற்றிய டைதல் ஆகியவற்றால் பலரு டைய திருஷ்டி மணமக்கள், தாய்-சேய், வெற்றியாளர் மீது அதிகம் விழவாய்ப்பு கூடுதலாக உள்ளது. மஞ்சள் மற்றும் சுண் ணாம்புக்கு கிருமிகளை அழிக்கும் திறனுண்டு என்பதை நாம் கண்ட றிந்துள்ளோம். அந்த நபரின் மேல் வந்து சேர்ந்திருக்கும் விஷ அணுக் களை அழிப்பதே ஆராத்தியின் உத்தேசம்.

ஆராத்தி எடுப்பதன் மூலம் நம் உடலில் சேரும் விஷ அணுக் களை அழித்து நம் நலன் பேணு வதோடு பிறருக்கும் அந்த விஷக் கிருமிகளை பரவாது காக்கிறது. வீட்டினுள் நுழையும் முன்பே ஆரா சரீரத்தில் சேர்ந் துள்ள திருஷ்டி மற்றும் கிருமி களை அகற்றி தூய்மைப்படுத்திய பின் னரே சம்பந்தபட்டவர்களை வீட்டுக் குள் அழைத்துக் கொண்டு போகும் வழக்கம் உள்ளது. எனவே அது போல் ஆராத்தி எடுக்கும்போது பொருள் அறிந்து சரியான பாவ னையுடன் செய் வது முக்கியம். அப்போது தான் அதன் பலனும் முழுமையாக நாம் பெற முடியும்.




மனிதர்களாகிய நாம், எதன் பொருட்டெல்லாம், அழுத்தமான கொள்கைகளை கடைப்பிடிக்கி றோம்? கடவுளின் மீதான அன்பில் அந்தஅழு தம் இருந்தால், பகவானே நம் மைத் தேடி வந்து அருள்வார் என்ப தற்கு, இவ் வரலாற்று உண் மையே சான்று.

ராமபிரான் மீது மிகுந்த பக்தியு டைய பக்தர் ஒருவர், அரங்க நாதரை தரிசிப் பதற்காக, திருவரங் கம் வந்தார். அப்போது, அங்கு சித்திரை விழா நடைபெற்றதால், தெற்கு வீதியில், தங்கக் குதிரை வாகனத்தில், திருவீதி உலா வந்தார் பெருமாள். தகதகவென ஜொலித்த அரங்க நாத ரைப் பார்த்ததும், தன் வசம் இழந்த பக்தர், தான் தரி சித்ததை அப்படியே கீர்த்தனை யாக வடித்தார். பின், கும் பலில் மிதந்தபடி வரும் பெருமா ளை, அருகில் சென்று தரிசிக்க முயன் றார். ஆனால், அதற்குள் தேர் இவரைக் கடந்து, மேற்கு வீதியில் திரும்பி விட் டது. பக்தருக்கு பெருத்த ஏமாற் றம்.

மேற்கு வீதியில் திரும்பிய ஊர்வ லம், அப்படியே நின்று விட்டது. பலவாறு முயற்சித்தும், திருஷ்டி கழித்தும், தேர் நகர வில்லை. இதனால், என்ன செய்வது என்று புரியாமல் அனைவரும் திகைத்து நின்றிருந்த வேளையில், அர்ச்சகர் ஒருவர் மீது ஆவேசித்த பகவான், என் பக்தன் ஒருவன், தெற்கு வீதியில் என் தரிசனத்துக்காக காத்துள்ளான். உடனே அவனை அழைத்து வாருங்கள் என, உத்தர விட்டார்.

தெற்கு வீதி நோக்கி ஓடிய முக்கியஸ்தர்கள், பெருமாளை அருகில் தரிசிக்க முடியவில்லையே என்ற வருத்தத்தில் நின்றிருந்த பக்தரை அழைத்து வந்தனர்.

நடந்ததை அறிந்த பக்தர் உடல் நடுங்க, கண்ணீர் வழிய, பெரு மாளே. இந்தத் தீனனிடத்தில் உனக்கு இவ்வளவு கருணையா என உள்ளம் உருகி, தேவகாந்தாரி ராகத்தில், ஒரு கீர்த்தனையைப் பாடி, பெருமாளை துதித்தார்.

அதன்பின், பெருமாளின் திருவீதி யுலா, எவ்வித இடையூறும் இன்றி நடந்தேறியது. அந்தப் பக்தர் தான் சங்கீத மும்மூர்த்திகளில் முதல் வரான தியாகராஜ சுவாமிகள்!

தன் பக்தருக்காக திருவரங்கநாதர் நடத்திய திருவிளையாடலை நினை த்து, அனைவரும் வியந்தனர். தூய்மையான பக்தி தெய்வ த்தை யே வரவழைக்கும் என்பதை விளக் கும் உண்மை இது.



# ஸ்ரீ பைரவர் வழிபாடும் மந்திரங்களும் ...

ஓம் ஹ்ரீம் மஹாபைரவாய நமஹ

**கால பைரவாஷ்டகம்**

ஆதிசங்கரர் அருளிய இதனை சனிக்கிழமை தோறுமோ அல்லது அஷ்டமித் திதி அன்றோ பாராயணம் செய்து வந்தால் பிணிகள் அகலும். வாழ்க்கை வளம் பெருகும்.

**ஸ்ரீ காலபைரவாஷ்டகம் .....**

தேவராஜ ஸேவ்யமான பாவனாம்க்ரி பங்கஜம்
வ்யால யக்ஞஸூத்ரமின் துஷேகரம் க்ருபாகரம் .
நாரதாதி யோகிவ்ருந்த வந்திதம் திகம்பரம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

பானு கோடிபாஸ்வரம் பவாப்திதாரகம் பரம்
நீலகண்டமீப்ஸிதார்ததாயகம் த்ரிலோசனம் .
கால காலமம்புஜாக்ஷ மக்ஷஷூலமக்ஷரம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

ஷூல டம்க பாஷ தண்டபாணி மாதிகாரணம்
ஷ்யாம் காயமாதி தேவமக்ஷரம் நிராமயம் .
பீம விக்ரமம் ப்ரபும் விசித்ரதாண்டவப்ரியம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

புக்திமுக்திதாயகம் ப்ரஷஸ்த சாருவிக்ரஹம்
பக்தவத்ஸலம் ஸ்திதம் ஸமஸ்த லோக விக்ரஹம் .
வினிக்வணன் மனோக்ஞஹேம கிங்கிணீ லஸத்கடிம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

தர்மஸேதுபாலகம் த்வதர்ம மார்கனாஷனம்
கர்மபாஷ மோசகம் ஸுஷர்மதாயகம் விபும் .
ஸ்வர்ணவர்ண ஷேஸ பாஷ ஷோபிதாம் கமண்டலம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

ரத்னபாதுகா ப்ரபாபி ராமபாத யுக்மகம்
நித்யம த்விதீயமிஷ்ட தைவதம் நிரம்ஜனம் .
ம்ருத்யு தர்ப நாஷனம் கரால தம்ஷ்ட்ர மோக்ஷணம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

அட்டஹாஸ பின்ன பத்மஜாண்டகோஷ ஸம்ததிம்
த்ருஷ்டி பாத்தனஷ்ட பாபஜால முக்ரஷாஸனம் .
அஷ்டஸித்தி தாயகம் கபாலமாலிகாதரம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

பூதஸம்கனாயகம் விஷாலகீர்த்திதாயகம்
காஷிவாஸ லோகபுண்ய பாபஷோதகம் விபும் .
நீதிமார்ககோவிதம் புராதனம் ஜகத்பதிம்
காஷிகா புராதினாத காலபைரவம் பஜே

**.. பல ஷ்ருதி ..**

காலபைரவாஷ்டகம் படம்தி யே மனோஹரம்
க்யானமுக்திஸாதனம் விசித்ரபுண்யவர்தனம் .
ஷோகமோஹ தைன்யலோப கோபதாப னாஷனம
விப்ரயாந்தி காலபைரவாம் க்ரிஸன்னிதிம்
நராத்ருவம்

.. இதி ஸ்ரீமத் சங்கராசார்ய விரசிதம் ஸ்ரீ

# கொடி மர தத்துவம்

கோவிலில் வாயிற்படி இருந்தால், அதை பெரும்பாலான பக்தர்கள் தொட்டுக் கும்பிடுவதை பார்த்து இருப்பீர்கள். வாயிற்படியை ஏன் தொட்டுக் கும்பிட வேண்டும். இதில் அறிவியல் பூர்வமான ஒரு செயலை நம் முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள்.

ஒரு பக்தன், கோவில் வாசற்படியை தொடக் குனியும் போது அது முதலில்அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பில் உள்ள சூரிய நாடியை இயக்குகிறது. படிக்கட்டைத் தொட்ட பிறகு வலது கை விரல்களை நம் நெற்றியில் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும்.

இது நம்மிடம் உள்ள தீய சக்திகளை விரட்டும். அதோடு தெய்வ சன்னதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகளை மிக எளிதாக நமக்குள் கிரஹிக்கச் செய்யும். எனவே அடுத்த தடவை கோவிலுக்குச் செல்லும் போது படிகளை வலது கையாற் தொட்டு, உங்கள் புருவ மத்தியில் சற்று அழுத்தம் கொடுத்துப் பாருங்கள்.

அது உங்களைப் புது மனிதனாக்கிப், புத்துணர்ச்சியுடன் கோவிலுக்குள்ளே செல்ல வைக்கும். உள்ளமும், உடலும் சிலிர்க்க நாம் அடுத்த காலடி எடுத்து வைத்ததும், நம் கண்களுக்கு கொடி மரம் தென்படும். ஆலயக் கொடி மரத்துக்கும் மிகப்பெரிய தத்துவங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் ஆலயங்களில் கொடி மரம் வைத்திருந்த பழக்கம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே வழக்கத்தில் இருந்ததற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

கோவிலில் திருவிழா தொடங்கும் சமயத்தில் கொடி ஏற்றம் நடந்ததைச் சங்க இலக்கியமான பட்டினப்பாலையில், 'மலர்மணி வாயில் பலர் தொழக் கொடியும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காடுகளில் சில மரங்களில் கொடி சுற்றி படர்ந்து இருப்பதை பார்த்து இருப்பீர்கள். அதில் இருந்து தான் கொடி ஏற்றும் பழக்கத்தை நம் முன்னோர்கள் உருவாக்கியதாகக் கருதப்படுகிறது.

அது பல்வேறு நடைமுறைகளாக மாறி, இன்று துவஜஸ்தம்பம் என்று அழைக்கும் நிலை வரை வந்துள்ளது. நம் உடம்பில் உள்ள முதுகெலும்பு போன்றது கொடி மரம் என்று ஆகமங்கள் சொல்கின்றன. நம் முதுகுத் தண்டுவடத்தில் 32 எலும்பு வளையங்கள் உள்ளன. அது போலவே 32 வளையங்களுடன் கோவிற் கொடி மரம் அமைக்கப்படுகிறது.

நம் முதுகுத் தண்டில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களும், இடை, பிங்கலை, சுழி முனை என்ற மூன்று நாடிகளும் அமைந்துள்ளன. பொதுவாக இடை, பிங்கலை வழியாகச் செல்லும் பிராண வாயுவை, சுழி முனை எனும் நடு நாடியில் நிறுத்தி இறைவனைத் தியானிக்க வேண்டும் என்பார்கள்.



இதனால் மனம் ஒரு நிலைப்படும். இறைவன் வெளிப்படுவான். இந்த அடிப்படையில் தான் கொடி மரம் அமைக்கப்படுகிறது. கொடி மரம் ராஜ கோபுரத்தை விட அதிக உயரமாக இருக்காது. அதே சமயத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும். அது போல கருவறையில் இருந்தும், ராஜகோபுரத்தில் இருந்தும் எவ்வளவு தூரத்தில், எவ்வளவு உயரத் தில் கொடி மரம் அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன.

இது கோவிலுக்குக் கோவில் மாறுபடும். ஆனால் பெரும்பாலும் கொடி மரத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பார்கள். இதன் அடிப்பகுதி அகலமாகவும், சதுரமாகவும் இருக்கும். இதற்கு சமபீடம் என்று பெயர். இந்த சதுர பாகம், படைப்புத் தொழிலுக்கு உரியவரான பிரம்மாவையும், அதற்கு மேல் உள்ள எண்கோணப்பகுதியான விஷ்ணு பாகம் காத்தல் தொழிலுக்கு உரியவரான விஷ்ணுவையும், அதற்கு மேல் உள்ள நீண்ட ருத்ர பாகம், சம்ஹாரத் தொழிலை செய்யும் சிவபெருமானையும் குறிக்கும்.

அதாவது கொடி மரம் என்பது மும்மூர்த்திகளையும், அவர்கள் மேற்கொள்ளும் மூன்று தொழில்களையும் உணர்த்துகின்ற ஒரு அடையாளமாகத் திகழ்கிறது. இதன் மூலம் கோவிலில் நுழைந்த உடனேயே வாழ்வின் மூன்று முக்கிய அம்சங்கள் நமக்கு உணர்த்தப்பட்டு விடுகின்றன. கொடி மரம் முழுவதும் பல்வேறு இறை உருவங்களை சிற்பங்களாக வடித்திருப்பார்கள்.

கொடி மர உச்சியில் மூன்று பட்டைகள் போன்ற ஏர் பலகை இருக்கும். இதனை திருஷ்டிப் பலகை என்றும் சொல்வார்கள். இதில் சிறு, சிறு மணிகளைக் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். அந்தக் கொடி கோவிலை உள்நோக்கியபடி இருக்கும். சிலகோவில்களில் மூன்று பட்டைக்கு பதில் ஒரே ஒரு பட்டையே இடம் பெற்றிருக்கும். மணி தொங்க விட்டிருக்க மாட்டார்கள்.

ஒவ்வொரு ஆலயத்துக்கு ஏற்ப இந்த அமைப்பு காணப்படும். ஒரே பட்டையுடன் இருக்கும் கொடி மர அமைப்பை கருடஸ்தம்பம் என்று சொல்வார்கள். சில ஊர்களில் கல்லில் கூட கொடி மரம் உள்ளது. இத்தகைய அமைப்புடைய கொடி மரத்தில் திருவிழா நாட்களில் கொடி ஏற்றுவார்கள்.

### ஏன் கொடி ஏற்றுகிறார்கள் தெரியுமா?

அதிலும் பல்வேறு தத்துவங்கள் அடங்கி உள்ளன. பொதுவாகக் கொடி என்பது ஆட்சி அதிகாரத்தைக் குறிக்கும். பழங்காலத்தில் ஒரு மன்னன் பக்கத்து நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டைப் பிடித்தால், அங்கு தன் அதிகாரம் வந்து விட்டத்தைக் குறிக்கும் வகையில் தனது கொடியைப் பறக்க விடுவான். அதே போன்று தான், திருவிழா நடக்கும் நாட்களில் அந்த ஊர் முழுவதையும் ஆண்டவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உணர்த்த கோவில்களில் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது.

இது மக்கள் மன நிலையில் மாற்றம் ஏற்படுத்தவும், விழா சமயத்தில் வெளியாட்களால் நோய் பரவல் ஏற்படுவதையும் தடுக்கிறது. இதை கருத்திற் கொண்டே கொடி ஏற்றுவதற்கு முன்பு கல்பம், அனு கல்பம் என்ற இருவகை சடங்குகளை செய்வார்கள். கொடி ஏற்றுவதற்கு முன்பு தேவதைகளை ஆவாகனம் செய்வது கல்பம் எனப்படும்.

கொடி ஏற்றிய பிறகு தேவதைகளை ஆவாகனம் செய்வது அனுகல்பம் எனப்படும். இந்த சடங்குகள் மூலம் கோவிற் கொடி மரங்கள் சக்தி மிக்கவைகளாக மாறுகின்றன. இத்தகைய மரத்தில் கொடி ஏற்றுவது இறைவனின் படைப்புத் தொழிலை குறிப்பதாகச் சொல்கிறார்கள்.


**எப்படித் தெரியுமா?**

கொடி மரம் என்பது இறைவன், கொடிக் கயிறு - சக்தி, கொடித் துணி - ஆத்மா, கொடி ஏற்றப் பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு -பாசம் ஆகியவற்றை குறிக்கும். கோவிலில் கொடி ஏற்றும் போது குருக்கள் வேதமந்திரங்கள் முழங்க, தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து, வளைத்து ஏற்றுவார்கள்.

இது உயிர்களையும், அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதை உணர்த்துகிறது. இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு நம்மனதை பலியிட வேண்டும், என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை காட்டும் வகையில் கொடி மரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். லௌகீக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் நாம், எல்லோருமே பாசத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்.

தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால், கொடித் துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் இறைவன் திருவடியை அடைதல் என்ற தத்தவத்தைக் கொடி ஏற்றம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது. நமது உயிர் இறைவன் திருவடியை தஞ்சமடைய வேண்டுமானால் நம் மனமும் ஒரு முகமாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

இதை உணர்த்த கொடி மரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சொல்கிறார்கள். இன்னொரு வகையில் சொல்வதென்றால் அசுர சக்திகளை அகற்ற, சிவகணங்களைக் கோவிலுக்குள் அழைக்க, ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவே கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. அதனால் தான் கொடி மர உச்சியில், அந்தந்த ஆலய இறைவனின் வாகனம் ஓர் அடையாள சின்னமாக அமைக்கப்படுகிறது.



சிவன் கோவிலில் நந்தி, பெருமாள் கோவிலில் கருடன், அம்மன் கோவிலில் சிங்கம், விநாயகர் கோவிலில் எலி, முருகன் கோவிலில் மயில், சாஸ்தா கோவிலில் குதிரை உருவம் அமைக்கப்படும். இந்த உருவங்களைத்தான் அந்தந்த ஆலயங்களில் கொடிகளில் வரைந்து ஏற்றுவார்கள். கீழ் நிலையில் உள்ள ஆன்மாவை இறைவன் உயர்நிலைக்கு உயர்த்துகிறான் என்பதை இது காட்டுகிறது.

இப்படி பல்வேறு வகைகளில் சிறப்புடைய கொடி மரத்துக்கு மூல லிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம், ஆராதனை, நைவேத்தியம் முதலிய அனைத்தும் செய்ய வேண்டும் என்பது விதியாகும். அந்த அளவுக்கு கொடி மரம் மூல வருக்கு நிகரானது. இன்னும் சொல்லப் போனால், கொடி மரம் அருகில் நின்று நாம் செய்யும் எல்லாப் பிரார்த்தனைகளும் மூலவரிடம் எதிரொலிக் கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடி மரத்தைத் தொட்டு வணங்கினால் மட்டும் போதாது. சுற்றி வந்தும் வணங்குதல் வேண்டும். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓரறிவை ஆறறிவு வணங்குகிறது என்று பாடியுள்ளார். ஓரறிவுள்ள மரத்தை ஆறறிவுள்ள மனிதன் வழிபடுகிறான் என்பது இதன் பொருள். இந்த வணக்க முறைக்கும் விதிமுறை உள்ளது.

நாம் கால் நீட்டி விழுந்து வழிபடும் போது, பின்புறம் எந்த தெய்வ சன்னதி யும் இருக்கக் கூடாது. ஆலயத்தின் உள்ளே பல சன்னதிகள் இருக்கும் என்பதால்தான் விழுந்து வணங்கக் கூடாது. கொடி மரம் இருக்கும் பகுதி யில் எந்த சன்னதியும் இருக்காது என் பதால்தான் கொடி மரம் அருகே விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள்.

ஆண்கள் எப்போதும் 2 கால்கள், 2 கைகள், 2 காதுகள், நெற்றி, மார்பு ஆகிய 8 உறுப்புகளும் தரையில் படும் வகையில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பெண்கள் தலை, 2 முழங்கால், 2 உள்ளங்கைகள் ஆகிய 5 உறுப்புகள் தரையில் பட பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். கொடி மரத்தை வழிபடும்போது நேராக நின்று வணங்கக் கூடாது.

கெட்ட கதிர்கள் நம் உடலுக்கு கெடுதல் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் அப்படி சொல்லி வைத்துள்ளனர். பொதுவாக கோவிலில் யாக வேள்விகள் நடத்தும்போது அவற்றை கொடி மரம் அருகில்தான் நடத்துவார்கள். இதனால் அந்த இடம் மந்திர சக்தி மிகுந்த இடமாக மாறும்.

அடிக்கடி யாக வேள்விகள் நடத்தும்பட்சத்தில் ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள் நிரம்பி விடும். ஆல்பா, பீட்டா இரு கதிர்களும் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் காமா கதிர்கள் பெரும் கெடுதல் ஏற்படுத்தி விடும். எனவேதான் கொடி மரம் எதிரில் நின்று கும்பிடாமல் சற்று ஓரமாக நின்று வழிபட்டு செல்ல வேண்டும்.

# சூரியனில் இருந்து வெளிவரும் ஓம் எனும் பிரணவ மந்திரம்



சூரியனில் இருந்து ஓம் எனும் சப்தம் வெளிவருவதாக நாசா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்து நமது முன்னோர்கள் ஆன்மீகத்தில் பயின்று வந்த, பயன்படுத்தி வந்த ஓம் போன்ற ஒலி சூரியனின் வளிமண்டலத்தின் வெளிப்புறத்தில் இருந்து வெளிவருகிறது என்று நாசாவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஓம் எனும் ஒலி மனதை அமைதியாக உணரவும், மனநிலையை ஒருமுகப் படுத்தவும் உதவுகிறது. சூரியனின் வளிமண்டல வெளிப்புறத்தில் இருந்து பெரிய காந்த சுழல்கள் எனப்படும் ஒளிவட்ட சுழல்கள் கண்டறியப்பட்டது. இது ஒலியின் அலைவரிசையை போல பயணிப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இசை சரங்களில் இருந்து அதிர்வுகள் வெளிவருவதை போன்று அது இருந்தது.

'ஷெபீல்ட்' பல்கலைக்கழகதின் வானியல் ஆய்வாளர்கள் செயற்கை கோளின் உதவியோடு, விண்வெளியில் ஆயிரம் மைல்களுக்கு பரவியிருந்த பெரிய காந்த சூழல்களை புகைப்படம் எடுத்தனர். பின்னர் அந்த அதிர்வுகளின் அளவை கணக் கிட்டு, அதை ஒலியாக மாற்றினர்.

சூரியனின் வளிமண்டலத்தில் இருந்து வெளிவரும் அந்த ஒலி யானது ஏதோ இசையை போல இருப்பதாக வானியல் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இதெல்லாம் கடந்த 2010ஆம் ஆண்டு நடந்த ஆய்வில் கண்டறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஓம் என்பது இந்து மதம் சார்ந்த, பண்டைய காலத்தில் இருந்து ஆன்மீக ஒலியாக கருதப்படும் ஓர் சப்தம் ஆகும். ஹிந்து, ஜெயின், புத்த மதம், சீக்கியர்கள் போன்ற வர்கள் ஓம் என்ற ஒலி உணர்வை கட்டுப்படுத்த, மேலோங்க வைக்க உதவும் சப்தமாக கருதுகிறார்கள். அடிப்படையில் ஓம் எனும் ஒலி மனதிற்கு அமைதியையும், மன நிலையை ஒருமுகப்படுத்தவும் உதவு கிறது என ஆன்மீக ரீதியாக மட்டு மின்றி அறிவியல் ரீதியாகவும் கூறப்படுகிறது

---

**அன்பார்ந்த ஞானச் செல்வர்களே!**

**ஞானக்கதிர் உங்கள் ஞானப்பசியை ஓரளவு தணித்திருக்கும் என நம்புகின்றோம். நீங்கள் பெற்ற ஞானத்தை மீட்டுப் பார்க்க உங்களுக்கு இங்கு ஒரு சந்தர்ப்பம்.**

## வினாக்கள்

1. கருங்கல்லில் சிலை வடிப்பது ஏன் ?
2. அஷ்ட பந்தத்தில் சேர்க்கும் திரவியங்கள் எவை?
3. 'கும்பகோணம்' எனப் பெயர் வரக் காரணம் யாது?
4. அசுரர்களின் குருவாணவர் யார்?
5. ஆராத்தி எடுப்பதன் காரணம் யாது?

வினாக்களுக்கான சரியான விடையை எழுதி வைகாசி 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். சரியான விடையெழுதும் 3 அதிஸ்ட சாலிகளுக்கு 3 மாதத்திற்கான ஞானக் கதிரின் புத்தகம் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர்

'ஞானக்கதிர்' 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விண்ணப்பம்

பெயர் :......................................................................

விலாசம் :......................................................................

தொ.பே.எண் :.......................................

திகதி:................ .....................

கையொப்பம்

---

சரியான விடையெழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள்:

**1. எஸ்.வரதராஜரெட்ணம்**
94/57, சிறி விக்கிரமபுர,
கொழும்பு.

**2. யனுஜா சண்முகராஜா**
612/1 நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்

**2. ப.ஜித்தேஷ்**
தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்



# தீமைகளில் இருந்து காக்கும் ருத்ராட்சம்

ருத்ராட்சம் என்பது ஈல்லியோகார்பஸ் கனிற்றஸ் (Elacocarpus ganitrus) என்ற பெயருள்ள மரத்தின் விதை. இபூஹ் விதை ஒருவரின் ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியமானதாக உள்ளது. இங்கு வெவ்வேறு வகையான ருத்ராக்ஷ மணிகளும் அவைகளின் பயன்களையும், பஞ்சமுகி ஏகமுகி போன்றவற்றை பற்றியும் சத்குருவின் பகிர்வு சத்குரு: இமாலய பகுதியை சேர்ந்த ஒருசில உயர்ந்த மலைப் பகுதிகளில் வளரும் குறிப்பிட்ட மரங்களின் விதைதான் ருத்ராட்சம். துரதிர்ஷ்டவசமாக இந்த மரங்களை இரயில்வே தண்டவாளங் களில் முன்பு பயன்படுத்தி வந்தார்கள். இதனாலேயே இந்தியாவில் இப்பொழுது வெகுசில மரங்களே மீதம் உள்ளது. இன்று இவை பெரும்பாலும் நேபாளம், பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. இவை தென் இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சில இடங்களில் காணப்பட்டாலும், சிறந்த தரம் உள்ளவை உயர்ந்த இமாலய பகுதியில் உள்ளவையே.இந்த விதைகளுக்கு என்று தனிப்பட்ட அதிர்வு உள்ளது. பெரிதாக உள்ள விதைகளில் அவ்வளவு அதிர்வு இருக்காது. விதை எவ்வளவு சிறியதோ அந்த அளவுக்கு அதிர்வும் கூடுதலாக இருக்கும். ருத்ராட்ச மாலைகள் இம்மணிகளை மாலையாக கோர்ப்பது வழக்கம். நமது மரபில் 108 + 1 என்ற கணக்கில் மணிகள் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த தனியாக உள்ள ஒரு மணியை பிந்து என்கின்றனர். ஒவ்வொரு மாலையிலும் ஒரு பிந்து இருப்பது அவசியம். இல்லையேல் அதன் சக்தி ஒருவித சுழற்சியில் சிக்கிக்கொள்ளும். இதனால் அதை அணிபவர் சிறிது பலவீனமாக இருப்பவரானால் தலை சுற்றல் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏகமுகி அணிந்தால் பன்னிரண்டு நாட்களில் குடும்பத்தை விட்டு விலகுவார் என்று மக்கள் சொல்கிறார்கள். ருத்ராட்ச மணிகளை கோர்க்கும் பொழுது பட்டுநூலோ அல்லது பஞ்சுநூல் கொண்டோ கோர்ப்பது சிறந்தது. நூலில் கோர்த்த மாலை என்றால், ஆறு மாதத்திற்கு ஒருமுறை நூலை மாற்றுவது நல்லது.

இல்லையென்றால் நூல் ஒரு நாள் அறுந்து உங்கள் 108 மணிகளும் ஒவ்வொரு பக்கம் உருள வாய்ப்பு உண்டு. செம்பு, வெள்ளி, தங்க கம்பியிலும் இம்மணிகளை கோர்க்கலாம், தளர்ந்த முறையில் கோர்ப்பது சிறந்ததும், முக்கியமும் ஆகும். அழுத்தத்தால் உண்டான விரிசல் உள்ள மாலை நல்லதல்ல. இந்த மாலையை எந்நேரமும் அணியலாம். குளிக்கும் பொழுது கூட நீங்கள் இதை அணியலாம். நீங்கள் தண்ணீரில் குளிப்பவராகவும், இரசாயன சவர்க்காரம் பயன் படுத்தாதவராகவும் இருந்தால், தண்ணீர் இதன் மேல் பட்டு உங்கள் உடல் மீது வழிவது மிக்க சிறந்தது. ஆனால் நீங்கள் இரசாயன சவர்க்காரமும், சுடு தண்ணீரும் பயன்படுத்துபவரானால், அது விரிசல் விட்டு சுலபமாக உடைந்து போக வாய்ப்பு உண்டு. அந்த மாதிரி சமயங்களில் இதை அணியாமல் இருப்பது நல்லது. ருத்ராட்சத்தின் பயன்கள் அதிகமாக பிரயாணம் செய்பவர்கள், பல்வேறு வகைப்பட்ட இடங்களில் சாப்பிட்டு, தூங்குபவர்களுக்கு, ருத்ராட்சம் அவர்களுடைய சக்தியின் கூடாக மாறி ஒரு நல்ல உறுதுணையாக இருக்கும். சில நேரம் நீங்கள் பார்த்திருப்பீர்கள் - புது இடமாக இருந்தாலும் சில இடங்களில் உடனே தூக்கம் வரும், ஆனால் வேறு சில இடங்களில், உடம்பு அசதியாக இருந்தாலும் கூட தூக்கம் வராது. பொதுவாக உங்களைச் சுற்றியுள்ள சக்திநிலை உங்கள் சக்திநிலைக்கு சாதகமாக இல்லையென்றால், அந்த இடம் உங்களை நிலைகொள்ள விடாது. சாதுக்களும், சந்நியாசிகளும் ஒவ்வொரு இடமாக சுற்றிகொண்டு இருப்பதால், பல இடங்களும் சூழ்நிலைகளும் அவர்களுக்கு சாதகமாக இருக்காது. அவர்கள் ஒரே இடத்தில் இரண்டு முறை தங்கியிருந்து தூங்கக் கூடாது என்று ஒரு விதிமுறை உண்டு. இன்று மறுபடியும் மக்கள் வேலை காரணமாகவோ, தொழில் காரணமாகவோ, பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்யவும், வெளியில் சாப்பிட்டு, தூங்கவும் வேண்டியிருப்பதால் ருத்ராட்சம் அணிவது மிகவும் பயனளிக்கும். இதில் மற்றொரு விஷயம் அடங்கியுள்ளது. காட்டில் வசிக்கும் சாதுக்கள், சந்நியாசிகள், அறியாத ஏதோ ஒரு குளமோ அல்லது குட்டையிலோ நீர் அருந்தக் கூடாது. இயற்கையிலேயே அந்த நீர் விஷ வாயு கொண்டதாகவோ, தூய்மை அல்லாமலோ இருக்கக்கூடும். அந்த நீரைக் குடித்தால் அவர்கள் முடம் ஆகவோ அல்லது உயிர் போகக் கூட வாய்ப்பு ஏற்படும். அந்த சமயங்களில் ருத்ராட்ச மாலையை நீருக்கு மேலாக தொங்க பிடித்தால், நீர் நல்லதாகவும், குடிக்க தகுதியானதாகவும் இருந்தால் - மாலை கடிகார முள் செல்லும் திசையில் (பிரதக்ஷணமாக) சுற்றும். விஷமுள்ளதாக இருந்தால் மாலை எதிர் திசையில்(அப்பிரதக்ஷணமாக) சுற்றும். உணவின் தரத்தையும் இவ்வாறு பரிசோதித்துப் பார்க்கலாம். எந்தவொரு நல்ல பிராண சக்தி உள்ள பொருளுக்கு மேலேயும் பிடித்து பார்த்தால் அது கடிகார முள் செல்லும் திசையில் சுற்றும். ஒரு கெட்ட பிராண சக்தி உள்ள பொருளுக்கு மேல் பிடித்தால் அது எதிர் திசையில் சுழலும்.

தீய சக்திக்கு எதிரான கவசம்! இது தீய சக்திக்கு எதிராக கவசமாக செயல்படவல்லது. ஒருவருக்கு கேடு செய்ய கூடிய தீய சக்திகளை சிலர் உபயோகப்படுத்துகிறார்கள். அது ஒரு விதமான விஞ்ஞானம். வேதங்களில் ஒன்றான அதர்வண வேதம் என்பதில், சக்தி நிலையை ஒருவருக்கு சாதகமாகவும், இன்னொருவருக்கு பாதகமாகவும் எப்படி உபயோகப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எவர் ஒருவர் இதில் தேர்ச்சி பெற்றுள்ளாரோ, அவர் இதைப் பயன்படுத்தி எல்லையில்லாத் துன்பம் உண்டாக்க முடியும். மரணத்தைக் கூட ஏற்படுத்த முடியும். நமது மரபில் மக்கள் ருத்ராட்சத்தை கையாள்வது என்பதை வாழ்வில் ஒரு புனிதமான பணியாக நினைத்தார்கள். ஒரு ருத்ராட்சம் இதிலிருந்து பாதுகாப்பாக இருக்க உதவும். ஏகமுகியும், பஞ்சமுகியும் ருத்திராட்ச மணிகளில் ஒன்றிலிருந்து இருபத்தொன்று முகங்கள் வரை உண்டு.
ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பயன் உள்ளதால், கடையிலிருந்து எதோ ஒன்றை வாங்கி அணிவது சரியல்ல. தப்பான ஒன்றை அணிவதால் வாழ்கையில் தொல்லைகள் வரலாம். ஏகமுகி மிகவும் சக்தி வாய்ந்தது என்பதால் அதை அணிவதில் பலருக்கு விருப்பம். நீங்கள் நிறைய முகங்கள் கொண்டவராக இருக்கிறீர்கள். உங்களுக்கு இவ்வளவு முகங்கள் இருக்கையில், ஏகமுகி அணிந்தால் கஷ்டத்தை விலைக்கு வாங்குவது போல ஆகிவிடும். ஏகமுகி அணிந்தால் பன்னிரண்டு நாட்களில் குடும்பத்தை விட்டு விலகுவார் என்று மக்கள் சொல்கிறார்கள். நீங்கள் குடும்பத்தை விட்டு விலகுவீர்களா இல்லையா என்பது ஒரு பக்கம், ஆனால் நீங்கள் தனியாக இருக்க விருப்பப்படுபவராக இதன் சக்தி நிலை உங்களை மாற்றிவிடும். மற்றவர்களுடன் ஒன்றி வாழ முடியாமல் போகும். வேறு விதமான சிறப்பு மணிகள் அணிய வேண்டுமானால், கடைகளிலிருந்து வாங்கி அணிவதைக் காட்டிலும், இதைப்பற்றி அறிந்தவரிடம் இருந்து பெற்றுக்கொள்வது சிறந்தது. பஞ்சமுகி எல்லோருக்கும் பொருந்தும், நல்லதும் கூட - ஆண், பெண், குழந்தைகள் உட்பட. பொதுவான நன்மை, உடல் நலம், விடுதலை ஆகியவை கிடைக்கும். இரத்தக்கொதிப்பை சீராக்கும், நரம்புகளை அமைதிப்படுத்தும், நரம்பு மண்டலத்தில் ஒரு வித அமைதியையும், சுறுசுறுப்பையும் அளிக்கும். 12 வயதுக்குள்ளாக இருக்கும் சிறுவர்கள் ஆறுமுக மணியை அணியலாம். அது அவர்களை அமைதியாக்கி, ஒருமுகப்படுத்தும் தன்மையை கொடுக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக பெரியோர்களின் சமநிலையான கவனிப்பை ஈர்ப்பார்கள்.
கௌரிஷங்கர் என்பது உங்கள் ஈடா பிங்களா நாடிகளை ஒருவித சமநிலையை அடையசெய்கிறது. பொதுவாக இது வாழ்வில் செழிப்பைக்



கொண்டு வரும் என்று நம்பப்படுகிறது. செழிப்பு என்பது பணம் மட்டும் அல்ல, பல வேறு விதங்களில் செழிப்பு அடையலாம். உங்களிடம் சொந்தமாக ஒன்றும் இல்லை என்றால் கூட வாழ்வில் செழிப்பாக இருக்கலாம். நீங்கள் ஒரு சமநிலை கொண்ட மனிதராக இருந்தாலோ, புத்திசாலித்தனமாக செயல்பட்டாலோ, செழிப்பு உண்டாகும். உங்கள் சக்திநிலை சீராக இருக்கும்போது இப்படி நடக்கும். கௌரிஷங்கர் உங்கள் ஈடா பிங்களா நாடியை சமன்படுத்தி சீராக்க செய்யும். உங்களுக்கு உங்கள் வாழ்கையை தூய்மையாக்க வேண்டுமானால் ருத்ராட்சம் ஒரு நல்ல கருவியாகவும் உதவியாகவும் இருக்கும். யாரோ ஒருவர் ஆன்மிக பாதையில் நடக்க வேண்டும் என்றால், தன்னை உயர்த்திக்கொள்ள, எந்த ஒரு சிறு கருவியாக இருந்தாலும், உபயோகபடுத்த வேண்டும் என்று நினைப்பார். இது ஒரு நல்ல கருவி. ஒரு குரு என்பவர் சாமான்யமாக வெவ்வேறு தரப்பான மனிதருக்கு வெவ்வேறு விதமாக ருத்ராட்சத்தை சக்தியூட்டிக் கொடுப்பார். ஒரு பிரம்மச்சாரியாகவோ அல்லது சந்நியாசியாகவோ ஆக வேண்டும் என்றால் முற்றிலும் வேறு விதமாக சக்தியூட்டப்படும். குடும்பத்தில் இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட விதமாக சக்தியூட்டியதை அணியக்கூடாது. நமது மரபில் மக்கள் ருத்ராட்சத்தை கையாள்வது என்பதை வாழ்வில் ஒரு புனிதமான பணியாக நினைத்தார்கள். வழி வழியாக வந்த தலைமுறைகள் இதே செய்தன. இதை ஒரு தொழிலாக செய்தாலும், அடிப்படியாக ஒரு புனிதமான அர்ப்பணிப்பாக நினைத்தார்கள். தேவைகள் அதிகரிக்க இது ஒரு வணிகமாக மாறியது. இன்று இந்தியாவில் பத்ராக்ஷா என்ற ஒரு விஷ விதை உள்ளது. இது அதிகமாக உத்தரபிரதேசம், பீகார் மாநிலங்களில் வளர்கிறது. இரண்டும் பார்க்க ஒரே மாதிரியாக இருக்கும். வித்தியாசம் கண்டுபிடிப்பது கடினம். கையில் எடுத்துப்பார்த்து, நுண்ணிய உணர்வுகள் இருப்பவராக இருந்தால் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியும். அதை உடலில் அணியக்கூடாது. ஆனால் அவை உண்மையான மணிகள் போல இன்று விற்பனை செய்யப்படுகிறது. ஆதலால் நம்பிக்கையான இடங்களில் இருந்து மாலைகளைப் பெறுவது அவசியம்.



நதியா நகை மாடம்
Nathiya
Nagai Madham
புன்னகை அரசியின்
பொன்னகையால்
மின்னிடுங்கள்
தங்கத்தின் தரம் மங்கா நிரத்தரம்
நாளைய நவீன டிசைன்களை
இன்றே வடிவமைத்துத் தருபவர்கள்
நதியா நகைமாடம்
இல. 02, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P 021 222 3479
கவுசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P 021 221 7189



மைதிலி
89v
maithily jewellery
நகைமாடம்
மைதிலி
மலரும் புத்தாண்டு
மங்காப் புகழ்படைத்த மைதிலியின்
தங்க நகையோடு ஜொலிக்கட்டும்
தரமான நகைகள் காலத்துக்கு ஏற்ற
கண்கவர் வண்ண டிசைன்கள் .
என்றும் மின்னும் தங்க வைர நகைககளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
மைதிலி ஜுவல்லறி
22கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
இல. 89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P 021 222 7902